விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சங்கு 24
ஒலி 140 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 25 திங்கட்கிழமை (08.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



## அரசாங்கத்துக்கு எதிராக மிகப்பெரிய கூட்டணி ஒன்றை அமைக்கத் திட்டம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

(மொனராகலை)

அரசாங்கத்துக்கு எதிராக விரைவில் மிகப்பெரிய கூட்டணி ஒன்றை அமைக்கவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

"வெற்றிக்கான பயணம்" எனும் கருப்பொருளில் மொனராகலை தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டின் 75 ஆண்டுகால ஜனநாயக வரலாற்றில், எதிர்க்கட்சிகள் தொகுதிவாரியாகத் தம்மை ஒருங்கிணைத்து எவ்வாறேனும் அரச அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதாக இருந்தாலும் தற்போதைய எதிர்க்கட்சிக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும், மக்களுக்கு பெரும் சேவையை 15

## 'சிங்கள பௌத்த பேரினவாதமே இன அழிப்பை நிறுத்துக'

### கந்தரோடையில் விகாரை அமைப்புக்கு எதிராக போராட்டம்






(யாழ்ப்பாணம்) "சிங்கள பௌத்த பேரினவாதமே தமிழர் தேசத்தில் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை நிறுத்துக" என்னும் கோஷங்களுடன் கந்தரோடையில் புதிய விகாரை அமைப்புக்கு எதிராக நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (15ஆம் பக்கம் பார்க்க)

## வங்கக்கடலில் தாழமுக்கம்

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தென்கிழக்கு வங்கக் கடலில் பயணிக்கும் பல நாள் மீன்பிடிக் கப்பல்கள் மற்றும் சரக்கு கப்பல்களுக்கு வானிலை ஆய்வு 15

## நாட்டில் மேலும் 6 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் மேலும் 6 பேருக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன், அரசாங்கத் தகவல் 15

## மின்சாரம் தாக்கியதில் மாணவன் உயிரிழப்பு

### நனைந்த ஆட்டுக்குட்டிகளை இடமாற்ற முற்பட்டவேளை பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

மழைக்குள் நனைந்த ஆட்டுக்குட்டிகளை இடமாற்ற முற்பட்ட வேளை மாணவன் ஒருவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. 15

## சமஷ்டி பேச்சுக்கு தயார் என ஜனாதிபதி அறிவிக்க வேண்டும்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சுவார்த்தையை சமஷ்டி அடிப்படையில் முன்னெடுப்பதற்குத் தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

குறித்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் அவருடன் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்கு தயாராக 15

### இறுதிக்காலாண்டில்

## அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிப்பு

(கொழும்பு)

இறுதிக் காலாண்டில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அரசு எதிர்பார்த்த இலக்குகளை எட்டினால், பொதுமக்கள் பயன்பெறுவார்கள் என்று அவர் 02

## சீனியின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனியின் விலை 240 ரூபாயாக அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகச் சந்தையில் வெள்ளைச் சீனி மெட்ரிக் தொன் ஒன்றின் 02

### சொந்த முயற்சியே

## இந்த மண்ணில் நிலைத்து வாழ மாற்றியமைக்கும்

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எங்களுடைய சொந்த நிலத்தில் சொந்தக் காலிலே நாங்கள் உழைத்து முன்னேறுவதுதான் இந்த மண்ணிலே நிலைத்து வாழக்கூடியவர்களாக மாற்றியமைக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உழ 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் முன்பள்ளி கட்டட திறப்பு விழாவும் நேற்று வெகு விமர்சையாக இடம்பெற்றது.


**சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), சுன்னாகம்**

**31.07.2022இல் உள்ளவாறான கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தல்**

சங்கத்தின் 2021/2022 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் கிராமிய வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தங்களது மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ள இக்காலத்துக்குரிய கணக்குப் புத்தகங்களுடன் கீழ் குறிப்பிட்ட நாள்களில் அக்கிராமிய வங்கிக்கு சமூகம் தந்து தங்கள் மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் கணக்குகளை உறுதிப்படுத்தாத வாடிக்கையாளர்களின் மீதிகள் சங்கப் பேரேடுகளின்படி சரியானதென உறுதிப்படுத்தப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| கிராமிய வங்கியின் பெயர் | பார்வையிடும் திகதி | பார்வையிடும் நேரம் |
|---|---|---|
| இணுவில் கிராமிய வங்கி | 11.05.2023 - வியாழக்கிழமை | காலை 09.00- பி.ப 04.30 |
| ஏழாலை கிராமிய வங்கி | 12.05.2023 - வெள்ளிக்கிழமை | காலை 09.00 - பி.ப 04.30 |
| குப்பிளான் கிராமிய வங்கி | 11.05.2023 - வியாழக்கிழமை | காலை 09.00 - பி.ப 04.30 |
| சுன்னாகம் கிராமிய வங்கி | 12.05.2023 - வெள்ளிக்கிழமை | காலை 09.00 - பி.ப 04.30 |

பொதுமுகாமையாளர்
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்

(C-6498)


## சீனியின் விலை...

விலை 500 டொலர்களில் இருந்து 750 டொலர்களாக அதிகரித்துள்ளதாகவும், இதன் காரணமாகவே இலங்கையிலும் வெள்ளைச் சீனியின் விலை அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கடந்த காலங்களில் ஒரு கிலோ கிராம் வெள்ளைச் சீனியின் விலை 190 ரூபாவாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அரச ஊழியர்...

தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப் படுத்தியதன் பின்னர் அடுத்துவரும் காலாண்டுக்குள் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்ததாக பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். (ம-7)

## சன்றைசஸ் வெற்றி



ராஜஸ்தான் - 214/2
சன்றைசஸ் - 217/6
ஆட்ட நாயகன் : பிலிப்ஸ்


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை
தரகர் தேவையில்லை

(15489)

தொடர்புகளுக்கு :- ஜெயம்
**077 814 7389, 077 986 5457**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**


- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை

தொடர்புகளுக்கு :- ஜெயம்
**077 814 7389, 077 986 5457**


# மரண அறிவித்தல்

தோற்றம்
18 – 12 – 1962



மறைவு
07 – 05 – 2023

## இராமலிங்கம் சிவசுதன்

மண்டைதீவு 6 ஆம் வட்டராத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இல. 44/2 அம்மன் வீதி கொக்குவில் கிழக்கில் வசித்துவந்தவருமாகிய இராமலிங்கம் சிவசுதன் நேற்று (07.05.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - பூங்காவனம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான மகாதேவன் - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் தயாழினியின் அன்புக் கணவரும் மதுசா (யாழ். பல்கலைக்கழகம்), தேனுஜா, கஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருஞானசம்பந்தன் (சாவகச்சேரி), அகிலத்திருநாயகி (நல்லூர்), ஜெகநாயகி (ஓய்வு பெற்ற ஆசிரியை - யாழ்/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), கமலநாயகி (அமெரிக்கா), தெய்வசிகாமணி (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் செந்தூரன், மயூரன், தீபா (லண்டன்) ஆகியோரின் சிறியதந்தையும் சசீலன், சஜீதா, சஜீவன், சஜீனா, சதுர்ஜா, சாகித்தியா, தேவதர்ஷிகா, டர்சனா, டக்சன் (அமெரிக்கா), அஸ்விதன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.05.2023) திங்கட்கிழமை அவரது கொக்குவிலுள்ள இல்லத்தில் பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

44/2, அம்மன் கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 434 9121

(15491)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாக அதிகரிக்கும் டெங்கு தொற்று நோயாக உருவாகும் அபாயம்!

## சுகாதாரத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

**டெங்கு ஒரு தொற்று நோயாக உருவாகும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக உடலியல் நிபுணர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம எச்சரித்துள்ளார்.**

இந்நிலையில், கம்பஹா, கொழும்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

2022 மே மாத இறுதியில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 24,206 ஆக இருந்த நிலையில் இந்தாண்டு இதுவரை 31,098 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதன்படி, டெங்கு நோய் தொற்று நோயாக உருவாகும் அபாயம் உள்ளதாக சுகாதாரத் துறையினர் வலியுறுத்தியுள்ளனர். (நி)

# எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும்- மஹிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமிருந்து கிட்டத்தட்ட 400 முன்மொழிவுகள் கிடைத்துள்ளதாக அதன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

குறித்த பரிந்துரைகளை மதிப்பாய்வு செய்து வருவதாகவும் விரைவில் அவை குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பகிர்ந்து கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் இடைக்கால அறிக்கை பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டது, இதனை தொடர்ந்து, தமது முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு கால அவகாசமும் வழங்கப்பட்டது.

குறித்த முன்மொழிவுகளை தேசிய எல்லை நிர்ணயக் குழு பரிசீலித்து குழுவின் இறுதி அறிக்கை இம்மாதத்தின் மூன்றாம் வாரத்தில் சமர்ப்பிக்கப்படும் என தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை சுமார் 4,000 ஆகக் குறைக்கும் நோக்கத்துடன் 2020 இல் தேசிய எல்லை நிர்ணயக் குழு உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இந்திய ரூபாவில் வர்த்தகத்தை தொடர்வதற்கான பேச்சுவார்த்தை ஆரம்பம்

(கொழும்பு)

இந்தியாவும் இலங்கையும் "மின்சக்தி, எரிசக்தி துறை மற்றும் ரூபாய் வர்த்தகம் தொடர்பான அம்சங்களில்" இருதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்த உள்ளமையால், இந்திய ரூபாவில் வர்த்தகத்தைத் தொடர்வதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன.

இதன்படி, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் நிர்வாகத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அதிகாரியான பிரமோத் குமார் மிஸ்ரா, இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவை புதுடெல்லியில் சந்தித்து , கடன் மறுசீரமைப்பு உட்பட பல விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பு இலங்கையின் பொருளாதார மீட்சியில் முக்கிய பங்கு வகிக்கும் என்பதை இலங்கை உயர்ஸ்தானிகர் வலியுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பின் ஊடாக இலங்கையில் இந்திய முதலீடுகள், மற்றும் சுற்றுலாத்துறை மேம்படுத்துதல், இருதரப்பு வர்த்தகத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான வழி முறைகள் என்பன தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கையின் பல வங்கிகள் வொஸ்ட்ரோட் கணக்குகள் எனப்படும் சிறப்பு ரூபாய் வர்த்தக கணக்குகளை திறந்துள்ளன. இதன்படி, இலங்கைப் பிரஜைகள் தற்போது 10 ஆயிரம் இந்திய ரூபாய்களை வைத்திருக்க முடியும்.

அத்துடன் இந்திய தரப்பினர்களுடனான பரிவர்த்தனைகளுக்கு அமெரிக்க டொலர்களுக்குப் பதிலாக இந்திய ரூபாவைப் பயன்படுத்தலாம் என்ற விடயம் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும் என இந்திய அதிகாரி பிரமோத் குமார் மிஸ்ரா மற்றும் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட ஆகியோர் இணக்கம் வெளியிட்டுள்ளனர். (நி)

# கோதுமை மாவின் விலை உயரலாம்

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை உயர்த்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இறக்குமதி வரி அதிகரிப்பு காரணமாக 10 ரூபா அல்லது அதனை விட குறைந்த தொகையில் கோதுமை மா ஒரு கிலோகிராமின் விலை உயர்த்தப்படும் என அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவின் சில்லறை விலை சிறு தொகையினால் உயர்த்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதி வரி, பெறுமதி சேர் வரி உள்ளிட்ட வரிகளினால் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 20 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

எனினும், துருக்கியிலிருந்து கோதுமை மா இறக்குமதி செய்யப்படுவதாகவும் அங்கு ஏற்பட்ட விலை வீழ்ச்சியினால் பெரிய தொகையில் மாவின் விலை உயர்த்தப்படாது எனவும் நிஹால் செனவிரட்ன தெரிவித்துள்ளார். (நி)

# ரூபாவின் பெறுமதியில் ஏற்படவுள்ள வீழ்ச்சி நெருக்கடிக்குள்ளாகவுள்ள மக்கள்

## பேராசிரியர் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கை ரூபாவின் பெறுமதி 567 ரூபாவாக குறையும் என பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு முதல் 2028 ஆம் ஆண்டு வரையிலான இலங்கை ரூபாவின் பெறுமதியை ஒப்பிடும் போது, 2022 ஆம் ஆண்டில் 1000 ரூபாவின் பெறுமதி 2028 ஆம் ஆண்டளவில் 567 ரூபாவாக குறையும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

2023 ஆம் ஆண்டு ஒருவரின் வருமானத்தை 43 சதவீதம் அதிகரிக்காமல் இந்த நிலையை எதிர்கொள்ள முடியாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால், இவ்வாறு வருமானத்தை பெருக்குவது ஒரு போதும் சாத்தியமில்லை எனவும் இதனால் மக்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த காலகட்டத்தில் 119% வரிச்சுமையை மக்கள் மீது திணிக்க அரசு திட்டமிட்டுள்ளதால் நிலைமை மேலும் மோசமாகும். 2023 ஆம் ஆண்டு 27,871 பில்லியன் ரூபாவாக இருந்த வரிச்சுமை 2028ஆம் ஆண்டில் 44,601 பில்லியன் ரூபாவாக உயரும்.

இந்நிலையைச் சமாளிக்க, ஒருவரது உணவு நுகர்வு அளவை பாதியாகக் குறைக்க வேண்டும். இது நடந்தால், பெரும்பாலான மக்கள் உணவுப் பற்றாக்குறையால் நோய் வாய்ப்பட்டு மரணமடைவார்கள்.

இந்த பேரிடரில் இருந்து மக்களை மீட்பதற்கு அரசாங்கம் அதிக முயற்சியையும் கூடுதல் செலவையும் செய்ய வேண்டியிருக்கும்.

தற்போது பொருளாதாரம் 3 - 4 சதவீதம் வரை சுருங்கி வருவதால், மக்களுக்கு நிவாரணம் வழங்குவது கடினம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# முட்டை உற்பத்தியில் தொடர் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த 2022ஆம் ஆண்டு கோழி மற்றும் கால்நடைத் தீவனங்களின் தட்டுப்பாடு காரணமாக இலங்கையில் முட்டை உற்பத்தி 5.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு, இந்த நாட்டில் முட்டை உற்பத்தி 1954 மில்லியன் ஆகும். ஆனால் 2022 ஆம் ஆண்டு இந்த நாட்டில் முட்டை உற்பத்தி 1849 மில்லியனாக குறைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டு ஒரு முட்டை உற்பத்திக்காக 18.07 ரூபாவும் 2022 ஆம் ஆண்டு ஒரு முட்டை உற்பத்திக்காக செலவிடப்பட்ட தொகை 38.10 ரூபாவாகும் என்றும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை அரிசி மற்றும் மக்காச்சோள உற்பத்தியில் கணிசமான குறைவினால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கால்நடை தீவனத்தின் அளவு குறைவடைந்துள்ளதாகவும் டொலர் பற்றாக் குறையினால் உணவு இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் முட்டை உற்பத்தி குறைவடைந்துள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# துபாய் பறந்தார் பசில் ராஜபக்ஷ



(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான பசில் ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து துபாய்க்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை புறப்பட்டுச் சென்றதாக விமான நிலைய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வெளிநாட்டு விஜயத்தில் பசில் ராஜபக்ஷவுடன் அவரது மனைவியும் பயணமாகியுள்ளார். (நி)

# கட்டணங்கள் செலுத்தாவிட்டால் நீர் இணைப்பு துண்டிக்கப்படும்

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

(கொழும்பு)

கட்டணங்களை செலுத்தாத அரச நிறுவனங்களுக்கு எதிர்காலத்தில் நீர் விநியோகத் துண்டிப்பு பட்டியலில் சேர்க்கப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.


மேலும், 90 நாட்களுக்குப் பின்னர் அரச நிறுவனங்களுக்கும் தாமதக் கட்டணம் அறிமுகப்படுத்தப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

2.9 மில்லியன் மக்கள் நீரை பெற்றுக்கொள்கின்ற நிலையில் அதில் பெரும்பாலானோர் நெருக்கடி காரணமாக மாதாந்திர கட்டணத்தில் 50% செலுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.பி.எல் தொடரில்

# 7,000 ஓட்டங்களை கடந்து விராட்கோலி புதிய சாதனை




இந்தியன் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் 7,000 ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற சாதனையை விராட் கோலி படைத்துள்ளார்.

டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்கெதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் கோலி 55 ஓட்டங்களை பெங்களூர் அணிக்காக பெற்றுக் கொடுத்தார்.

இந்தநிலையில், ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் 7,000 ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

இந்த வரிசையில் 6,536 ஓட்டங்களுடன் ஷிகர் தவான் இரண்டாம் இடத்திலும் 6,189 ஓட்டங்களுடன் டேவிட் வோர்னர் மூன்றாவது இடத்திலும், 6,063 ஓட்டங்களுடன் ரோஹித் சர்மா நான்காவது இடத்திலும் உள்ளனர். (நி)

# சென்னை-மும்பை அணிகள் மோதிய போட்டியை நேரில் கண்டுகளித்த பிரபலங்கள்

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியை திரைப்பிரபலங்கள் பலரும் நேரில் கண்டு களித்தனர்.

டாஸ் வென்ற சென்னை பவுலிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பட் செய்த மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 139 ரன்களை எடுத்தது. இதையடுத்து, 140 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்னை அணி 140 ரன்களை எடுத்து வெற்றி பெற்றது. சென்னை சேப்பாக்கத்தில் நடந்த இந்த போட்டியை திரைப்பிரலங்கள், அரசியல் பிரமுகர்கள் பலரும் நேரில் கண்டுகளித்தனர். அதன்படி நடிகரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், நடிகர் தனுஷ், நடிகைகள் நயன்தாரா, வரலட்சுமி சரத்குமார், இயக்குநர்கள் விக்னேஷ்சிவன், லோகேஷ் கனகராஜ், இசையமைப்பாளர் அனிருத் உள்ளிட்ட பல பிரபலங்கள் கலந்து கொண்டனர். இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது. (நி)

# 20 வருடங்களுக்கு பின் இலங்கை வீராங்கனை சாதனை




இலங்கை - பங்களாதேஷ் மகளிர் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரின் 2ஆவது போட்டியில் இலங்கை வீராங்கனை ஓஷதி ரணசிங்க 5 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

கடந்த 20 வருடங்களில் மகளிருக்கான ஒருநாள் சர்வதேச போட்டியொன்றில் இலங்கை வீராங்கனை ஒருவர் 5 விக்கெட் வீழ்த்தியமை இதுவே முதல் தடவை என குறிப்பிடப்படுகின்றது.

கடந்த 4 ஆம் திகதி எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் இலங்கை மகளிர் அணி 58 ஓட்டங்களால் வென்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 186 ஓட்டங்களைப் பெற்றது.

அணித்தலைவி சாமரி அத்தபத்து 60 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 4 பவுண்டறிகள் உட்பட 64 ஓட்டங்களைக் குவித்தார்.

ஹிர்ஷிதா சமரவிக்ரம 48 பந்துகளில் 45 ஓட்டங் களையும் கவீஷா தில்ஹாரி 15 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் மகளிர் அணி 29.5 ஓவர்களில் 128 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அணித் தலைவி நிகார் சுல்தானா 51 பந்துகளில் 37 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இலங்கை அணியின் பந்து வீச்சாளர்களில் ஓஷதி ரணசிங்க 6 ஓவர்களில் 34 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

மகளிருக்கான ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இலங்கை வீராங்கனை ஒருவர் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியமை இது 3 ஆவது தடவையாகும். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2825

### தனுஷா

மனைவி மீது கோபத்தை அளவுக்கு மீறி வெளிப்படுத்தினால்...



சாம்பார் ரசமாகும். ரசம் விஷமாகும்...

### தாரகா


30 வயசாச்சு இன்னுமாடா ரோட்டில போற நாய்க்கெல்லாம் பயப்படுறாய்...




30 வயசு என்று எனக்குத் தெரியும் நாய்க்குத் தெரியுமா?

### பிறிற்றோ

பிரியாணியை காசு கொடுத்து தானே வாங்குறோம். அப்புறம் ஏன் முட்டையை ஒளிச்சு வைச்சு தாராங்க...



### டினா

கணவன்:- சாமிக்கிட்ட என்னம்மா வேண்டிக்கிட்டாய்!

மனைவி:- அடுத்த பிறவியே வேண்டாம் என்று தான்...

கணவன்:- இதை போன பிறவியிலேயே வேண்டியிருக்க கூடாதா!!

### அலெக்ஸ்

ஆசிரியர்:- கிலோமீற்றரை எப்படி மீற்றரா மாத்தனும்?




மாணவன்:-கிலோவைத் தூக்கிற்றா மீற்றர் ஆயிடும் சேர்...

### அல்பேட்

உனக்கு இரவு தூங்குறதுக்கு மட்டும் குளு குளுன்னு இருக்கனும்...




பகல்ல நான் வந்தா உனக்கு நச நசன்னு இருக்குன்னு சொல்லுவியோ...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வறுமைக் கோடு இரட்டிப்பாக அதிகரிக்கும்

## உலக வங்கி எச்சரிக்கை

(வோஷிங்டன்)

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, வறுமை விகிதத்தை 13.1 வீதத்தில் இருந்து 25 வீதமாக இரட்டிப்பாக்கியுள்ளதாக உலக வங்கி கணித்துள்ளது.

அத்துடன் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு ஏற்படும் பல அபாயங்கள் காரணமாக அடுத்த சில வருடங்களில் அது 25 வீதத்திற்கு மேல் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியானது வறுமைக் குறைப்பு மற்றும் மனித மூலதன மேம்பாடு ஆகியவற்றில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் நாட்டின் பொருளாதாரம் இந்த ஆண்டும் அதற்கு அப்பாலும் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்ளும் என்றும் உலக வங்கி கணித்துள்ளது.

இதன்படி நாட்டின் பொருளாதாரம் இந்த ஆண்டு 4.3 சதவிகிதம் சுருங்குகிறது. எனவே நாட்டின் வளர்ச்சி வாய்ப்புகள், நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கடன் மறுசீரமைப்பின் முன்னேற்றத்திலேயே தங்கியுள்ளது.

அதுவே வலுவான மற்றும் நெகிழ்வான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஒரு வாய்ப்பாகவும் அமையும் என்றும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. (நி)

# பணம் அதிகமாக கிடைக்கிறது என்பதால் காணிகளை மாற்று சமூகத்தினருக்கு விற்காதீர்கள்

## சித்தார்த்தன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

பணம் அதிகமாக கிடைக்கிறது என்பதற்காக உங்கள் காணிகளை மாற்று சமூகத்தினருக்கு விற்க வேண்டாமென, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித் தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் நடந்த செய் தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார். மேலும் குறிப் பிடுகையில்,

பௌத்தர்களே இல்லாத இடங்களில் பௌத்த விகாரைகள் கட்டப்படுகின்றன.

விகாரைகளை கட்டி, அதை பராமரிக்க மெதுமெதுவாக ஆட் களை கொண்டு வந்து, சிங்கள பிரதேசங்களாக்கும் நடவடிக்கைகள் நடந்து வருகிறது.

இந்த ஆட்சியில் பல விடயங்கள் நிறுத்தப்படலாமென பலர் நினைத்தனர். ஆனால் நிறுத் தப்படவில்லை. ஜனாதிபதிக்கு பலமுறை முறையிடப்பட்டும், அது கவனிக்கப்படவில்லை.

இவற்றை நிறுத்த நாம் முயற்சிகள் எடுக்க வேண்டும். பேச்சுவார்த்தை, சாத்வீக வழி, பாராளுமன்றத்தின் ஊடாக முயற்சிக்க வேண்டும். அவற்றை செய்து கொண்டிருந் தாலும், அவற்றின் வேகம் போதாது என நினைக்கிறேன்.

வெளிநாட்டிலுள்ள பலர், இங்குள்ள காணிகளை பிற சமூகத்தவர்களுக்கு விற்பதால் ஏற்படும் அபாயத்தை புரிந்து கொள்ளாமல் தொடர்ந்து விற்று வருகிறார்கள். சில இடங்களில் காணிகள் விற்கப்பட்டுள்ளதை அறிகிறோம். நல்லூரிலும் விற்க ப்படுகிறது.

இங்குள்ள இராணுவத்தினர் வெறும் காணிகளை அடையாளம் கண்டு, அவற்றின் உரி மையாளர்களை அடையாளம் கண்டு, அவற்றை வாங்கும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள்.

ஆகவே, சிறியளவு பணம் அதிகமாக கிடைக்கிறது என்பதற்காக மாற்று சமூகத்தினருக்கு விற்பதை நிறுத்துங்கள்.

பௌத்த விகாரைகள் கட்டப்படுவது என்பது ஒரு பிரச்சினை அல்ல. ஆனால் தமிழர்கள் வாழும் பகுதிகளை ஆக்கிரமித்து கட்டப்படுகின்றது என்பதே குறிப்பிடத்தக்க விடயமாகும் என அவர் தெரிவித்தார். (நி-33)

# குறும்பட ஆவண தயாரிப்பு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை கலையியல் திரைப்பட பன்னாட்டு கூடத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறும்பட , ஆவணப்பட தயாரிப்பு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டதுடன் அவர்களின் தயாரிப்புகளும் திரையிடப்பட்டன.

வடமாகாண ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் , வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும் கேடயங்களையும் வழங்கி வைத்தார். (நி-33)


4ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.திரு
செல்லத்துரை தர்மரத்தினம்
(பெரியண்ணை)
(உரிமையாளர்- STR Multy Center, STR Travels- அராலி



தோற்றம் 1945.03.28
மறைவு 2019.04.22

திதி.சங்கடஹர சதுர்த்தி
08.05.2023

என்றும் எம்மை அன்புடன் அரவணைத்து
நம் வாழ்வில் முன்னேறிட பல அறிவுரைகள்
தந்த அன்புத் தந்தையை நாம் இழந்து
நான்காண்டுகள் ஓடிவிட்டதே...
தேம்பித் தவிக்கின்றோம் உம் நினைவில்...

துன்னாலை மத்தி,
கோவிற்கடவை, கரவெட்டி. (15487)

என்றும் உங்கள்
நினைவில் வாழும்,
குடும்பத்தினர்.


# இராசிபலன்

08.05.2023
சித்திரை 25, திங்கட்கிழமை
திருதியை முன்னிரவு- 7.40 மணிவரை

கேட்டை முன்னிரவு 8.31 மணிவரை
சுபநேரம் -11.55-1.25 மணிவரை
இராகுகாலம்-7.25-8.55 மணிவரை

சந்திராஷ்டமம் - பரணி, கார்த்திகை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

வள்ளவன்

**மேஷம்** உடல் நலனில் கவனம் தேவை, குடும்பத்தில் கோபமாகப் பேசிவிட்டுப் பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், வீண் விரயங்களைத் தவிர்ப்பது நல்லது.

**ரிஷபம்** கடன் தொல்லைகள் குறையும் வாய்ப்புண்டு, உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** கனவு பலிதமுண்டு காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நடை பெறும் நாள்; உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**கடகம்** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், எதிர்கால நலன்கருதி முக்கிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களை முடிக்க உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**துலாம்** புதிய பொறுப்புக்களும், பதவிகளும் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொது வழியில் புகழ் கூடும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் பகை அகலும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** பயணங்களால் பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, உடல் நலனில் சிறு இடையூறுகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், சுப விரயங்கள் கூடும்.

**மகரம்** முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்வீர்கள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அருமையான நாள், அன்பு நண்பர்கள் ஆதரவு தரமுன் வரலாம், உற்சாகமான நாள்.

**மீனம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், திறமை மிக்கவர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும், கடுமையான எதிர்ப்புக்கள் திடீரென சாதகமாகும்.

இன்பச் சிரிப்பே இல்லத்தின் ஒளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசதியற்ற குடும்பங்களின் வாழ்வாதார நிதிக்கான நட்சத்திர நர்த்தன சங்கம நடனப் போட்டி



(சாவகச்சேரி)

வசதியற்ற குடும்பங்களின் வாழ்வாதார நிதிக்காக கொடிகாமம் நட்சத்திரமஹால் ஏற்பாடு செய்த "நட்சத்திர நர்த்தன சங்கமம்" நடன இறுதிப்போட்டி நிகழ்வுகள் அண்மையில் கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் இடம்பெற்றிருந்தன.

மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட நடனப் போட்டியில் மொத்தம் 75 நடன அணிகள் பங்கேற்றிருந்தன.

இதில் மூன்று பிரிவுகளிலும் முதலாம் இடங்களைப் பெற்ற நடன அணிகளுக்கு தலா இரண்டு இலட்சம் பணப் பரிசிலும் இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கு ஒரு இலட்சமும் மூன்றாம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் பணப் பரிசிலும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதில் கிராமிய நடனத்தில் (கீழ்ப் பிரிவு) முதலாம் இடத்தினை கந்தர்மடம் நர்தன ஷேஸ்திரா நடனப்பள்ளி, இரண்டாம் இடத்தினை மல்லாவி சங்கரா நிருத்தியாலய மந்தரா குழு, மூன்றாம் இடத்தினை வவுனியா நிருத்தி யார்ப்பண்ணா நாட்டிய கலாலயம் ஆகியன பெற்றுக் கொண்டன.

புத்தாக்க நடனத்தில்(மத்திய பிரிவு) முதலாம் இடத்தினை மட்டக்களப்பு சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயம், இரண்டாம் இடத்தினை முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயம்,மூன்றாம் இடத்தினை யாழ்ப்பாணம் நிருத்திக நிகேதன் நாட்டியாலயம் ஆகிய நடனக் குழுவினர் பெற்றிருந்தனர்.

அதேபோல் பரத நாட்டியத்தில் (மேற்பிரிவு) முதலாம் இடத்தினை கந்தர்மடம் நர்த்தன ஷேஸ்திரா நடனப்பள்ளி, இரண்டாம் இடத்தை கிளி நொச்சி தர்ஷன நிகேதனாஸ் கலாலயா, மூன்றாம் இடத்தினை அம்பாறை சிவ நடன கலாசாலை நடன அணியினரும் பெற்றுக் கொண்டனர்.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தியாவைச் சேர்ந்த நடன பயிற்றுவிப்பாளர் யுவராஜ் கலந்து சிறப்பித்திருந்தார். (நி-30)

# கனத்த மழை காரணமாக முறிந்து விழுந்த பாரிய மரம்





(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்பு பாரிய மரம் ஒன்று முறிந்து விழுந்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு கனத்த மழை காரணமாகவே இடம்பெற்றுள்ளது.

மேலும் குறித்த சம்பவத்தினால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. (நி)



பாடசாலை மாணவர்களிற்கு பாதணிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு லண்டன் வோல்தம்ஸ்ரோவ் கற்பகவிநாயகர் ஆலயத்தின் நிதிப் பங்களிப்பில் இடம்பெற்றது. (படம்:-தேவானந்தன்)

# மக்கள் பாவனைக்கு வழங்கப்படாத ஆயுர்வேத மருத்துவமனை



(தருமபுரம்)

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் தருமபுரம் பகுதியில் கரைச்சி பிரதேச சபையினரால் நவீனஆயுர்வேத மருத்துவமனை ஒன்று அமைக்கப்பட்டது.

புனரமைப்பு பணிகள் நிறைவடைந்து ஒரு வருடம் கடந்த நிலையிலும் மருத்துவமனையினை மக்கள் பாவனைக்காக இதுவரை திறந்து விடப்படவில்லை.

மருத்துவமனை வளாகம் பற்றைப்புல்களால் சூழப்பட்ட நிலையில் காணப்படுவதுடன் இரவு வேளைகளில் கால்நடைகளின் தங்குமிடமாகவும் மதுபிரியர்களின் பாவனையிலும் உள்ளது.

பல லட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவமனையில் விரைவாக மக்களின் பாவனைக்காக வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதியில் உள்ள பொதுஅமைப்புகள், பொதுமக்கள் கோரிக்கை எடுத்துள்ளனர். (நி-316)



சாவகச்சேரி-சங்கத்தானை சாரதா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் குருதி வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதனால் அந்த தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் முகமாக குறித்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (படம்:-சுபேசன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 100 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 200 | 200 |
| தக்காளி | 200 | 300 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 200 | 180 | 200 | 250 |
| கரட் | 160 | 220 | 300 | 300 |
| பூசணி | 60 | 40 | 60 | 60 |
| புடோல் | 100 | 160 | 120 | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 130 | 140 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 120 | 120 | 150 | 250 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 400 | 500 | 400 | 400 |
| லீக்ஸ் | 250 | 400 | 300 | 350 |
| பீற்றூட் | 220 | 200 | 240 | 300 |
| கறிமிளகாய் | 200 | 300 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 400 | 800 |
| போஞ்சி | 350 | 500 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 160 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 150 | 150 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 60-80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 350 | 300 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | 600 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 50 | 50. | 50 |
| ஈரப்பலா | 100 | -- | -- | 180 |

### 12 மில்லியன் பெறுமதியான

# 'ஐஸ்' போதைப்பொருளுடன் இருவர் மன்னாரில் கைது

(மன்னார்)

மன்னார் மதவாச்சி பிரதான வீதியான குஞ்சுக்குளம் வீதியில் வைத்து 12 மில்லியன் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர்கள் பயன்படுத்திய கார் ஒன்றையும் இராணுவ புலனாய்வாளர்கள் மீட்டுள்ளனர.

நேற்று முன்தினம் மன்னார் தள்ளாடி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மன்னாரிலிருந்து சென்ற குறித்த காரை பின்தொடர்ந்து சென்ற புலனாய்வுப் பிரிவினர் குஞ்சுக்குளம் அருகில் உள்ள விகும்புர பகுதியில் வாகனத்தை சோதனை செய்தனர். இதன் போது வாகனத்தினுள் நூதனமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருளின் பெறுமதி 12 மில்லியன் ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் கல்பிட்டியை சேர்ந்த (38) வயது மற்றும் மன்னார் அடம்பனைச் சேர்ந்த (27) வயதுடைய நபர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப் பொருள் சந்தேகநபர்கள் மற்றும் வாகனம் உட்பட சான்றுப் பொருட்கள் அனைத்தும் [illegible] மன்னார் [illegible] ஒப்படைக்கப்பட்டுள்ளது. (நி-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் அரச செங்கோல் வைரம் எங்களுடையது

## -திருப்பித் தருமாறு வற்புறுத்தும் தென்னாபிரிக்கா-



0 பிரிட்டன் அரச செங்கோலில் இருக்கும் உலகின் மிகப்பெரிய வைரத்தை திருப்பித் தருமாறு மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர் தென்னாபிரிக்கர்கள்.

தென்ஆபிரிக்காவில் இருந்து 1907 காலகட்டத்தில் எடுத்து வரப்பட்ட உலகின் மிகப்பெரிய வைரம், தற்போது மூன்றாம் சார்லஸ் பதவியேற்பின்போது பயன்படுத்த உள்ள செங்கோலில் உள்ளது. இந்த வைரத்தை தென்ஆபிரிக்காவிடமே திருப்பித் தர வேண்டும் என்ற கோரிக்கை அந்நாட்டைச் சேர்ந்த பலராலும் முன் வைக்கப்பட்டு வந்தது.

தற்போது மீண்டும் இது பற்றி வலுவாக குரலெழுப்பி இருக்கிறார்கள் தென்னாபிரிக்கர்கள். வைரத்தை தென்ஆபிரிக்காவிற்கு திருப்பித் தருமாறு ஜோகன்னஸ் பேர்க்கை சேர்ந்த வழக்கறிஞரும் சமூக செயற்பாட்டாளருமான மோதுசி கமங்கா என்பவரின் முன்னெடுப்பில் சுமார் 8,000 பேர் ஒன்லைன் மனுவில் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

கல்லினன் 1 என்று அழைக்கப்படும் 530 காரட் எடை கொண்ட இந்த வைரமானது, 1905 ஆம் ஆண்டு தென்ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது தென் ஆபிரிக்கா பிரிட்டன் ஆட்சியின் கீழ் இருந்ததால் அந்நாட்டின் கொலனித்துவ அரசால் பிரிட்டிஷ் அரச குடும்பத்திற்கு நன்கொடையாக் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

செங்கோலில் உள்ள வைரமானது, பிரிட்டோரியாவுக்கு அருகில் வெட்டப்பட்ட 3,100 காரட் கல்லான, கல்லினன் வைரத்திலிருந்து வெட்டப்பட்டதென சொல்லப்படுகிறது. அதே கல்லில் இருந்து வெட்டப்பட்ட ஒரு சிறிய வைரம், கல்லினன் II என அழைக்கப்படுகிறது.

இது பிரிட்டன் மன்னர்கள் முக்கிய நிகழ்ச்சிகளில் அணியும் இம்பீரியல் ஸ்டேட் கிரீடத்தில் உள்ளது. க்யின் மேரியின் கிரீடம், பிற அரசு குடும்பத்தினர் ஆகியோரிடம் கல்லினன் வைரங்கள் III, IV, V ஆகியவை உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# கொங்கோவில் கடும் மழை 203 பேர் உயிரிழப்பு



(கொங்கோ)

கொங்கோவில் இயற்கை அனர்த்தங்களில் சிக்கி 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழுந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் உள்ள பல்வேறு மாகாணங்களில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்து வருவதுடன், பல்வேறு பகுதிகளில் மண்சரிவும் ஏற்பட்டுள்ளது.

கடும் மழை மற்றும் மண்சரிவில் சிக்கி 203 பேர் உயிரிழுந்துள்ளதாக கொங்கோ அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், படுகாயமடைந்த 400 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பலர் காணாமல் போனதாகவும் கூறப்பட்டுள்ளது.

அதேநேரம், வெள்ளம், மண்சரிவில் சிக்கியவர்களை மீட்கத் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர், இராணுவத்தினர் களமிறக்கப்பட்டு மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ள நீர் தொடர்ந்து அதிகரித்து வருவதால், பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# கனடாவில் காட்டுத்தீ

(ஒட்டாவா)

கனடா நாட்டில் உள்ள ஆல்பர்ட்டா பகுதியில் பயங்கர காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது.

குறித்த தீ வேகமாக பரவி வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் அந்நாட்டு அவசரகால மேலாண்மை அமைச்சகம் தெரிவிக்கையில், பல அடி உயரத்துக்கு புகை மண்டலம் மேல் எழும்பி உள்ளது. காட்டுத் தீயில் 1458 ஹெக்டேர் பகுதி எரிந்து நாசமாகி இருக்கிறது.

தீயை அணைக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தீயணைப்பு வீரர்கள் கடுமையாக போராடி வருகிறார்கள். காட்டுத் தீயில் சிக்கி ஏராளமான வீடுகள் எரிந்துள்ளன. (நி)

# அமெரிக்காவில் பயங்கர துப்பாக்கிச் சூடு

## சிறுவர்கள் உட்பட 08 பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் டெக்சாஸ் மாநிலத்தின், டல்லாஸ் நகருக்கு வடக்கே உள்ள வணிக வளாகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிதாரி பிரயோகத்தில் எட்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவத்தினால், வணிக வளாகத்தில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிதாரியையும் சுட்டுக் கொன்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பலியானவர்களில் சிறுவர்கள் சிலரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் ஏழு பேர் காயமடைந்துள்ள நிலையில், காயமடைந்தவர்கள் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், அவர்களில் மூன்று பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஜப்பானில் அடுத்தடுத்த நிலநடுக்கம் ஒருவர் பலி, 22 பேர் படுகாயம்

(டோக்கியோ)

ஜப்பானில் ஒரே நாளில் அடுத்தடுத்து 2 முறை நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் ஒருவர் உயிரிழந்ததாகவும், 22 பேர் படுகாயம் அடைந்ததாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

முதல் நிலநடுக்கமானது கடலுக்கு அடியில் சுமார் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.3 புள்ளிகளாக பதிவான இந்த நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டடங்கள் குலுங்கின. இதனால் பயந்து போன அவர்கள் பாதுகாப்பு கருதி தங்களது வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். இதனால் ஏற்பட்ட பீதி தணிவதற்குள் இரண்டாவது முறையும் அங்கு பயங்கர நிலநடுக்கம் உணரப்பட்டது.

இந்த முறை கடலுக்கு அடியில் சுமார 12 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் ரிக்டர் அளவுகோலில் 6.5 புள்ளிகளாக இருந்ததால் இதில் பொதுமக்கள் தங்களது வீடுகளில் உடமையான அதிர்வினை உணர்ந்தனர். இதனால் ஏராளமானோர் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர். எனினும் சக்தி வாய்ந்த இந்த நிலநடுக்கத்தில் பல வீடுகள், கட்டடங்கள் குலுங்கியதால் சரிந்து விழுந்தன. அப்போது இடிபாடுகளில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார். 22 பேர் படுகாயம் அடைந்தனர். மீட்புப் படையினர் அவர்களை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் சேத விபரங்கள் குறித்த முழுமையான விபரங்கள் தெரியவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

# சார்லஸ் முடிசூடிக் கொண்டதை தொடர்ந்து அவுஸ்திரேலியா குடியரசாக வேண்டும் என்ற வேண்டுகோள்கள் தீவிரம்

(கன்பெரா)

மூன்றாவது சார்லஸ் மன்னர் முடிசூட்டிக்கொண்டுள்ளதை தொடர்ந்து அவுஸ்திரேலியா குடியரசாக வேண்டும் என்ற வேண்டுகோள்கள் மீண்டும் தீவிரமடைந்துள்ளன.

அவுஸ்திரேலியா குடியரசானால் நாட்டின் தலைவர் என்ற பதவியிலிருந்து மன்னர் சார்லஸ் அகற்றப்படுவார். ஆனால் அவுஸ்திரேலியா தொடர்ந்தும் பொதுநலவாயத்தில் நீடிக்கும்.

எனினும் இது இடம்பெறுவதற்கு அரசமைப்பு மாற்றத்திற்கான சர்வஜன 'வாக்கெடுப்பு அவசியம்.

அதன் பின்னர் நாட்டின் தலைவரை தெரிவு செய்ய மீண்டும் வாக்கெடுப்பு இடம்பெறும்.

பிரிட்டனின் காலனியாதிக்க காலத்தில் அவுஸ்திரேலியாவின் பூர்வீகக்குடிகள் எதிர்கொண்ட பல நெருக்கடிகள் குறித்து ஏபிசியின் தொகுப்பாளர் ஸ்டான் கிராண்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாங்கள் வரலாற்றை நேரியல் வழியில் பார்ப்பதில்லை. வரலாறு நமக்குள் வாழ்கின்றது. இது குறிப்போ அடிக்குறிப்போ இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா என்ற அடையாளத்தின் ஒரு பகுதியே அரசகுடும்பம் என தெரிவிக்கின்றார் பாராளுமன்ற உறுப்பினர் அலெக்கிரா ஸ்பென்டர். அரசகுடும்பத்தை மதிக்கின்ற அதே வேளை அவுஸ்திரேலியாவின் அடையாளத்தை மதிக்க வேண்டும் என அவர் குறிப்பிடுகின்றார்.

எனினும் குடியாட்சிக்கு மாறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு அவுஸ்திரேலியாவில் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே காணப்படுகின்றன என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இளவேனிற் கால சளித்தொல்லை, ஜலதோசம், இருமல், ஒவ்வாமை போன்றவற்றிற்கான மூலிகை மருத்துவம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சித்த மருத்துவத்தில் சிகிச்சை செய்யும் முறை காலங்களுக்கு ஏற்ப செய்யப்படும் அதாவது சூழலில் ஏற்படும் மாறுபாட்டிற்கேற்ப எமது உட லிலும் மாற்றங்கள் ஏற்படும். அந்த வகையில் நாம் இப்பொழுது உத்தராயண காலத்தில் வாழ்கிறோம். முன்பனிக் காலப் பிற்பகுதித் திங்களாகிய தைத் திங்கள் முதல், முதுவேனிற் காலத்தின் முற்பகுதியான ஆனித் திங்கள் ஈறாகக் கூடிய அறு திங்கள் உத்தராயணமாகும்.

அவை முன்பனிக் காலத்தின் கடைசித் திங்களாகிய தையும் பின்பனிக் காலத்து மாசி, பங்குனியும் இளவேனிற் காலத்துச் சித்திரை, வைகாசியும் முதுவேனிற் காலத்து முதலாந் திங்களாகிய ஆனியுமாம். மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனிகளிலும் தட்சணாயனத்தின் ஆரம்பத் திங்களாகிய ஆடியிலும் உத்தராயணத்திற்குரிய வெப்பம், தீ, முதலியவற்றால்உடல்வன்மைகுன்றும். ஆதலால் இம் மாதங்களாகிய மாசி முதல் ஆடி ஈறாய் உள்ள ஆறும் உத்தராயணம் என்று வைத்திய சாத்திரத்திற் கொண்டு இதை ஆதான காலம் எனக் கூறி இப்பொழுது நாம் இளவேனிற் காலமாகிய சித்திரை, வைகாசி மாதங்களில் வாழ்கிறோம்.

பின்பனிக் காலத்தில் தன்னிலை கருதி பெற்ற கோழை (கபம்), இளவேனிற் காலத்தில் சூரிய வெப்பத்தால் தன்னிலை பிறழ்ந்து மிகவும் அதிகப்படுவது இயல்பு. இக்கோழையின் அதிகரிப்பு,பசித் தீயைக் கெடுத்துப் பற்பல கோழைப் பிணிகளை விளைவிக்கும். ஆகையால் இக் கோழையை உடனே தணிக்க முயல வேண்டும். இளவேனில் காலத்தில் மலர்களின் ஆதிக்கமும் இருப்பதனால் ஒவ்வாமை தாக்கங்களும் ஏற்படும். ஆகையால் இவற்றை தணிக்க வேண்டும்.

அதிகம் குளிர்ச்சி தரும் உணவுகளையும் அதிகம் சூட்டைத் தரும் உணவுகளையும் மாறி மாறி சாப்பிடுதல், வெயிலில் அதிகமாக அலைதல், புகைப் பிடித்தல் மற்றும் சிலருக்கு சில பூக்களின் மகரந்தத் தூள் வாசனைகள் ஒவ்வாமையை ஏற்படுத்தி இருமலை உண்டாக்கும். குடற் பூச்சிகளுக்கு ஒழுங்காக புழுக்கொல்லி சிகிச்சை எடுக்காமல் விடுவதாலும் பல தரப்பட்ட தொழிற்சாலைகளின் புகைகளை சுவாசித்தல் போன்ற காரணிகளு டன் உடலுக்கு ஆகாத உணவுகள், உடலுக்கு ஆகாத செய்கைகள் என்பவற்றினாலும் ஆஸ்துமா நோய் ஏற்படுகின்றது.

### மூலிகை மருத்துவ முறைகள்.

சுடுநீரை அருந்த வேண்டும். சுட வைத்த நீரில் சஞ்சீவி இலைகளை அல்லது நீலகிரி தைலம் 20 துளிகள் இட்டு சுட வைத்துள்ள தண்ணீரில் கழுத்து வரை குளிக்கலாம்.

கைப்பிடி அளவு மொசுமொசுக்கை இலைகள் பறித்து தண்ணீரில் கழுவி அத்துடன் வேர்க் கொம்பு, மிளகு, சீரகம் ஒவ்வொன்றிலும் சிறிதளவு எடுத்து தூளாக்கி மொசுமொசுக்கை இலைகளுடன் பிசரி காலை,மாலை ஒரு வாரம் சாப்பிட்டு வர சளி சம்பந்தமான நோய்கள் அகலும்.

இரவு படுக்க முன் சிறிய வெங்காயத்தில் பெரிதாக ஒன்றை எடுத்து மென்று தின்று விட்டு ஒரு டம்ளர் சுடுநீர் அருந்தினால் காலையில் சளி குறையும். இம் மாதிரி அடுத்தடுத்த நாளும் சாப்பிட வேண்டும்.

சுக்கு(வேர்க்கொம்பை) உலர்த்தி, தோல் சுரண்டி, பொடித்து, அரித்து வைத்துக் கொள்ளவும். 2-4 கிராம் பொடியை தேனில் குழைத்து காலை, மாலை 3 நாட்கள் சாப்பிட்டு வர சளி குணமாகும்.

ஒரு மண் சட்டியில் ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு துணியில் வேரு கட்டி துணிமேல் ஒரு பிடி அளவு ஆடாதோடை இலைகளைக் கிள்ளிப் போட்டு வேக வைத்த பின் இலைகளை கசக்கி பிழிந்த சாறு எடுத்து ஒரு வேளைக்கு 4 தேக்கரண்டி வீதம் காலை, மாலை பருகி வர வேண்டும். இவ்வாறு தினமும் புதிய சாறு எடுத்து 3 நாட்கள் குடித்து வர சளி குணமாகும்.

அதிமதுர வேரின் (தமிழ் மருந்துக் கடைகளில் வாங்கலாம்) சிறு குச்சியை வாயில் போட்டு அடக்கிக் கொண்டு எச்சிலை மட்டும் விழுங்கி வர கடுமையான இருமல் நீங்கும்.

நான்கு மிளகும் ஒரு கைப்பிடி கருந்துளசி இலைகளும் சேர்த்து 250 மில்லி நீர் விட்டு 1/4 பங்காக வற்றக் காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை தொடர்ந்து 5 நாட்கள் வரை அருந்தலாம்.

இஞ்சிச்சாறு ஒரு மில்லி, தேன் 10 மில்லி , சின்ன வெங்காயச் சாறு 10 மில்லி அளவு கலந்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் தொடர்ந்து 7 நாட்கள் வரை அருந்த இருமல், ஆஸ்துமா குறையும். குழந்தைகளுக்கு ஒவ்வொன்றும் 5 மில்லியாக குறைத்து அருந்தலாம்.

பூண்டுச்சாறு 10 மில்லியுடன் தேன் 10 மில்லி கலந்து தினமும் காலையில் அருந்த இருமல் தணி யும்.

மொசுமொசுக்கை இலையை இரண்டு கைப்பிடி அளவு எடுத்து இட்லி மாவுடன் சேர்த்து அரைத்து அத்துடன் பூண்டு, இஞ்சி, வெ காயம் சேர்த்து இட்லி செய்து வாரத்தில் 3 அல்லது 4 நாட்கள் தொடர்ந்து 9 வாரம் மேற்படி பயன்படுத்தலாம்.

கைப்பிடி புதினா இலைகளை ஒரு சட்டியில் போட்டு ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு மூடி கொதிக்க வைத்து வடிகட்டிய கசாயத்தில் 1/2 எலுமிச்சைப் பழச்சாறும் ஒரு மேசைக்கரண்டி தேனும் கலந்து தொடர்ந்து சில நாட்களுக்கு குடிக்க சளி வெகுவாக க்குறையும்.

தூதுவளை இலைகளைப் பிடுங்கி நடு நரம்பில் இருக்கும் முட்களை சீவி சம்பல் செய்து சாப்பிட சளி,இருமல் தணியும்.

தூதுவளை இலைகளை நன்கு கழுவி நடு நரம்பு முட்களை சீவி சிறுக சிறுக அரிந்து நெய்யில் வதக்கி வெங்காயம் சேர்த்து தாளித்து 2 மேசைக்கரண்டி அளவு அருந்த ஆஸ்துமா குணமாகும்.

தோல் நீக்கிய உலர்ந்த சிற்றரத்தை 100 கிராம் கற்கண்டு 100 கிராம் தனியாகப் பொடித்து அரிந்து ஒன்றாக கலந்து வைத்துக் கொண்டு 2-4 கிராம் அளவு வாயிலிட்டு ஒரு டம்ளர் பால் குடிக்க இருமல் சளி நீங்கும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் இருமல் நிலைமைகளில் வெற்றிலை/ சீந்தில் இலைகளை வாட்டி தாங்கக் கூடிய சூட்டில் மார்பில் ஒற்றடம் கொடுக்கலாம். அல்லது வெற்றிலைச் சாறு 10 மில்லி இஞ்சிச் சாறு 5 மில்லி சேர்த்து தேனும் 5 மில்லி அளவு கலந்து இருமல் சளி மூக்கடைப்பு நோய்களுக்கு வழங்கலாம்.

முடிதும்பைச் செடியினை வேருடன் பிடுங்கி வேரை மட்டும் வெட்டிக் கழுவி சுத்தம் செய்து சிறுக அரிந்து 40 கிராம் அளவு ஒரு மண் சட்டியில் போட்டு 160 மில்லி நீர் சேர்த்து 30 மில்லியாக சுண்டக் காய்ச்சி ஒரு வேளை மட்டும் உட்கொண்டு வர தலைப்பாரம் ஒற்றைத் தலை வலி தீரும்.

தலையில் நீர் கோர்த்தலுக்கு தும்பை மலர்களைச் சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி 100 கிராம் அளவு பூக்களை 500 மில்லி நல்லெண்ணெயில் இட்டு காய்ச்சி தைலம் தயாரித்து வாரம் தோறும் முழுகி வர எல்லா வித நீரேற்றத் தலை நோய்களும் தீரும். நீரேறிக்கனத்து தலை தூக்க முடியாத தலை வலியும் மண்டைக்குத்தும் நீங்கும்.

தும்பையிலைச் சாறு திருநீற்றுப் பச்சையிலைச்சாறு பச்சைக்கற்பூரம் மூன்றும் கலந்து மூக்கில் உறிஞ்ச தலைப் பாரம் குறையும்.

நஞ்சறுப்பான் இலைகளையும் வேரையும் சேகரித்து நீரில் கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து 12 கிராம் அளவிற்கு 2.5 கிராம் மிளகும் 5 கிராம் பனை வெல்லமும் சேர்த்து பொடித்த தூளில் 1-2 கிராம் தேனுடன் காலை மாலை இருமல் இருக்கும் தருணம் பயன்படுத்தலாம்.விரல்மஞ்சளில் ஒரு துண்டை எடுத்து விளக்கெண்ணெய் தடவி திரி விளக்கில் காட்டி புகையை 2 3 தரம் மூக்கினால் உறிஞ்ச தலைப்பாரம் நீங்கும்.

திருநீற்றுப் பச்சை இலைகளைக் கசக்கி ஒரு டம்ளர் சாறு எடுத்து 4 தேக்கரண்டி மிளகைப் போட்டு 3 நாட்கள் வரை கலக்கி ஊற வைக்க வேண்டும். பின்னர் மிளகை எடுத்து நன்கு காயவைத்து பொடித்து அரிந்து ஒரு போத்தலில் வைத்துக் கொண்டு உறிஞ்சி வர பீனிசம் சளி ஒழுகல் குணமாகும்.

கண்டங் கத்திரிப்பழம் ஒன்றை தினசரி காலை 7 நாட்கள் சாப்பிட இருமல் குணமாகும்.வெள்ளெருக்கம் பூ (கழுவி விட வைத்து) 100 கிராம் மிளகு 50 கிராம் இலவங்கம் 35 கிராம் இவற்றை அரைத்து மிளகளவு மாத்திரை செய்து வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் 2 வேளை வெற்றிலையில் வைத்து மென்று தின்ன இந் நோய் தீரும்.

வயதானவர்களுக்கு ஏற்படும் ஓயாத இருமலுக்கு அம்மான் பச்சரிசி இலையைக் கழுவி கசக்கி சாறு பிழிந்து வடிகட்டி 4 தேக்கரண்டி சாறு எடுத்து சிறிது சீனி கலந்து காலையில் மட்டும் தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிட்டு வர குணமாகும்.

இஞ்சி சிறிய வெங்காயம் எலுமிச்சைப்பழம் தனித்தனியாக சம அளவில் கலந்து வேளைக்கு 20 மில்லி காலை மாலை 3 நாட்கள் பருக வரட்டு இருமல் தணியும்.

மாதுளம்பழச்சாற்றுடன் இஞ்சிச் சாறு மற்றும் தேன் கலந்து 20 மில்லி அளவு காலை மாலை வேளை 2 தேக்கரண்டி வீதம் தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிட்டு வர சளி இருமல் தீரும்.

வேர்க்கொம்புத்தூள் 50 கிராம் மிளகுத்தூள் 50கிராம் திப்பிலித்தூள் (உலர் கனி) 50 கிராம் எடுத்து பொடித்து பனை வெல்லம் 300 கிராம் இவைகளை ஒன்று சேர மீண்டும் இடித்து அதில் 2-4 அளவு தினசரி இருவேளை வெந்நீரில் உண்ண சளித் தொல்லை நாட்பட்ட ஆஸ்துமா தீரும்.

வில்வ இலைகளை நன்கு கழுவி உலர்த்தி பொடித்த தூளினை 1/2 தேக்கரண்டி தேனில் குழைத்து தினசரி இரு வேளை சாப்பிட ஜலதோசம் விலகும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் இருமல் சளித்தொல்லைக்கு கற்பூரவள்ளி இலைகளை வாட்டி சாறு பிழிந்து வடித்து 1/2 அல்லது 1 தேக்கரண்டி அளவு தேனில் கலந்து கொடுக்கலாம். பெரியவர்களுக்கு 10-20 மில்லி அளவு வரை பயன்படுத்தலாம். வாட்டிய பின்பே கற்பூ ரவள்ளி இலைகளில் சாறு எடு க்க வேண்டும்.

சளியுடன் சாதுவாக இரத்தம் வரும் நிலைமைகளிலும் தொண்டை அரிப்பு ஏற்படும் சமயத்திலும் இம் பூரல் மூலிகை வேருடன் சேகரித்து நன்கு கழுவி அதற்கு 1/4 பங்கு மிளகு சேர்த்து அரைத்து சிறிது பனை வெல்லம் சேர்த்தரைத்து 3கிராம் உருண்டையாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். ஒரு உருண்டை வீதம் காலை மாலை வாயிலிட்டு உமிழ்ந்து சாப்பிட்டு வரவும்.

அதிமதுரம் (உலர்ந்த வேர்) திப்பிலி (உலர் கனி) ஆகியன மட்டும் தமிழ் மருந்துக் கடைகளில் வாங்கிக் கொள்ளலாம். எனவே பக்க விளைவுகள் அற்ற சூழலியல் சார்ந்த் இம் மூலிகைகளை நாம் பயன்படுத்தி ஆரோக்கிய வாழ்வை வாழ முயற்சித்தல் காலத்தின் அவசியமாகும்.

சிற்றாமுட்டி வேர்களைச் சேகரித்து நன்கு கழுவி சிறு துண்டுகளாக சிதைத்து 35 கிராம் அளவு எடுத்து நான்கு பங்கு நீர் விட்டு 1/4 ஆக வற்றக் காய்ச்சி 30 மில்லி அளவு தினம் 3 வேளை அருந்த ஆஸ்துமா தணியும்.

அறுகம்புல் சாறு மாதுளம் பூச்சாறு இவற்றை சம எடையாக கலந்து அதிலிருந்து 35 வீதம் தினசரி மூன்று வேளை குடிக்க ஜலதோசம் தலைப்பாரம் தீரும்.

அத்திப் பழத்தைச் சாப்பிட நுரையீரலுக்கு ஒரு ஸ்பெஷல் ரோனிக்காக அமையும். உயர்ந்த ஊமத்தம் இலைகளை சுருட்டுப் போல சுருட்டி புகையை இழுக்க சுவாசச் சிறு குழாய்கள் விரிவடைந்து ஆஸ்துமாவில் ஏற்படும் வெளி மூச்சு கஷ் டம் தீரும்.

திப்பிலி ஒரு துண்டை வறுத்து பொடி செய்து தேனில் குழைத்து மூன்று வேளை 2 நாட்கள் சாப்பிட வரட்டு இருமல் தணியும்.

20 தும்பை 10 துளசி (கருந் துளசி) இலை ஒரு பெரிய கார வெற்றிலை 5 உடைந்த மிளகு அனைத்தையும் ஒரு சட்டியில் போட்டு ஒரு டம்ளர் தண்ணீர் விட்டுக் காய்ச்சி வடிகட்டிய கசாயத்தைப் பருகி வர மார்புச் சளி குறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோயல் கல்லூரி-கொழும்பு 07
# க.பொ.த (சா/த) மூன்றாம் தவணைப் பரீட்சை
# வரலாறு பகுதி - I

## பகுதி I

1) கி.பி 4 ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதும் மகாசேன மன்னனின் ஆட்சிக்கால முடிவு வரை இந்நாட்டின் வரலாற்றுத் தகவல்கள் அடங்குவதுமான நூலாக அமைவது.
1. தாதுவம்சம் 2. போதிவம்சம் 3. தீபவம்சம் 4. மகாவம்சம்

2) புராதனக் காலத்திற்குரிய இலக்கிய சமயத் தகவல்கள் மற்றும் வம்சக் கதைகள் எழுதப்பட்டது.
1. களிமண் பலகை 2. செப்புத்தகடுகள்
3. ஓலைச்சுவடிகள் 4. பொன்தகடுகள்

3) மகாவம்சத்தின் முதலாம் பாகம் எழுதப்பட்ட நான்கு நூற்றாண்டுகளின் பின்னர் எழுதப்பட்ட மொழியாக அமைவது.
1. சிங்களம் 2. சமஸ்கிருதம் 3. மாகதி 4. பாளி

4) இலங்கையின் வரலாற்றினை விளக்கும் போது தூதுகாவியம், போர்க்காவியம், புகழ் காவியம் போன்ற மூலாதாரங்கள் முக்கியமாக அமைவது கீழ்க்காணப்படும் எக்காலப் பகுதியுடன் தொடர்புடையது?
1. கோட்டை இராசதானி முதல் கண்டி இராசதானி காலம் வரை
2. தம்பதெனியாக் காலம் முதல் கோட்டைக் காலம் வரை
3. பொலநறுவைக் காலம் முதல் குருணாகல் காலம் வரை
4. கம்பளைக் காலம் முதல் கோட்டைக் காலம் வரை

5) கீழே காணப்படும் எழுத்தாளர்களில் இலங்கைக்கு வருகை தராது, இலங்கைக்கு வருகை தந்தவர்களிடம் கேட்டறிந்து எழுதப்பட்ட எழுத்தாளர்களை குறிப்பிடும் விடையாக அமைவது.
A- அரிஸ்டோட்டில் B- இபின் பதுதா
C- பிளினி D- பர்னாவோ டீ குவேரோஸ்
E- பாகியன் தேரர் F- ரிபைரோ
1.A,C,D 2.B,D,F 3.B,C,E 4.A,C,E

6) இலங்கையின் வரலாற்றினைக் கற்கும் போது கல்வெட்டுக்கள் கீழ்வரும் எக்காரணத்தினால் முக்கியம் பெறுகின்றது?
1. கல்வெட்டுக்கள் கற்களில் பதிக்கப்பட்டு இருப்பதால்.
2. பல்வேறு காலகட்டத்தில் எழுதப்பட்டுள்ளதால்.
3. வம்சக் கதைகளில் காணப்படும் தகவல்களை உறுதிப்படுத்த இவை பயன்படுவதால்.
4. இலங்கையின் பழைமை வாய்ந்த ஆவண வகையாகக் காணப்படுவதனால்.

7) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்ற பழைமையான இடமாகக் கருதப்படுவது.
1. அத்தனகொட அலுவென
2. கித்தள்கல பெலிலென
3. குருவிட்ட பட்டதொம்பலென
4. பாகியன்கல

8) இறந்த உடல்கள் உக்கும் வரை புதைக்கப்பட்டு பின் வெளியில் எடுத்து எலும்புக்கூட்டினை கல்லில் உராய்ந்து மட்டமாக்கப்பட்டுள்ளதுடன் வர்ணம் தீட்டும் வழக்கமும் காணப்பட்டது என்பதற்கு ஆதாரமாகக் காணப்படும் காலப்பகுதியாக அமைவது.
1. முன்வரலாற்றுக்காலம் 2. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
3. வரலாற்றுக்கு பிற்பட்ட காலம் 4. வரலாற்றுக்காலம்

9) இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக ஆற்றினை மறித்து அணைக்கட்டு அமைத்த ஆட்சியாளனாக விளங்குபவன்.
1. இளநாக மன்னன் 2. முதலாம் அக்கபோதி
3. இரண்டாம் அக்கபோதி 4. தாதுசேனன்

• கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் A முதல் H வரை தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 10ம், 11ம் வினாக்களுக்கு விடை எழுதுக?

| | இராசதானி | தொடர்புகள் | தொடர்புடைய நாடு |
|---|---|---|---|
| | | | |
| A | அநுராதபுரம் | C. இந்நாட்டிக் தூதுப் பயணங்கள் இருபது முறை மேற்கொள்ளல் | F-உரோம் |
| | | | |
| B | பொலன்னறுவை | D. ருவன்வெலிசாயாவினை அலங்காரம் செய்ய கண்ணாடிமணிகள் கொண்டுவரப்பட்டமை | G-சீனா |
| | | | |
| | | E. திரிலோக சுந்தரி எனும் இளவரசியினை திருமணம் செய்தமை | H-கலிங்க தேசம் |

10) பாதிகாபய மன்னனுடன் தொடர்புடைய தகவல்களடங்கிய விடையினைத் தெரிவு செய்க.
1.EGH 2.ADF 3.BDF 4.ACH

11) முதலாம் விஜயபாகு மன்னனுடன் தொடர்புடைய விடையினைத் தெரிவு செய்க.
1.BEH 2.BDG 3.ADF 4.AEH

12) பண்டைய மன்னர்கள் மக்களுக்கு விழிப்புணர்வு செய்வதற்காக அமுல்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களடங்கிய கல்வெட்டு பகுதி I லும் அதில் காணப்பட்ட தகவல்கள் பகுதி II லும் காட்டப்பட்டுள்ளது. பகுதி I பகுதி II உடன் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையாக அமைவது.

| பகுதி I | பகுதி II |
|---|---|
| 1. கொண்டை வெட்டுவான் தூண் கல்வெட்டு | A- சந்தையின் நிர்வாகம் தொடர்பான சட்டதிட்டங்கள் |
| 2. பதுளை தூண் கல்வெட்டு | B- சுற்றாடல் மற்றும் விவசாயம் போன்றவற்றிற்கான சட்டதிட்டங்கள் |
| | C- விகாரைகள் ,ஆராமைகளின் நிர்வாகம் தொடர்பான சட்டதிட்டங்கள் |
| 3. கொடவாய கல்வெட்டு | D- துறைமுகத்தில் அறவிடப்பட்ட தீர்வை வரி |
| | |

1.BAD 2.ACD 3.CAD 4.ABC

13) "போஜக்கபதி" என மூலாதாரங்களில் க்ரட்டப்படுவது.
1. குளங்களின் நீரினை பயன்படுத்துவோரிடம் இருந்து அறவிடப்பட்ட வரி.
2. அரசனுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர் செய்வதற்காகச் செலுத்தப்பட்ட வரி.
3. வாய்க்கால்களில் மீன் பிடித்ததற்காக அரசுக்குச் செலுத்திய வரி.
4.சேனைகளில் விவசாயம் செய்வதற்காக விதிக்கப்பட்ட வரியாகும்.

14) முற்காலத்தில் நீண்டதூரத்தினை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அளவீடுகளை மாத்திரம் அடங்கிய விடையாக அமைவது.
1. அங்குலம், வியத்த, பரமாணு
2. வியத்த, யொதுன, உசக
3. கவ்வ, யொதுன, உசக
4. பரமாணு, அங்குலம், வியத்த

15) முற்கால கல்வெட்டுக்களில் வொஹார,லபத,வாபர,வெஜ எனக் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட பெயர்கள் காணப்படும் விடையினைத் தெரிவு செய்க?
1. வைத்தியர்கள், கலைஞர்கள்,வழக்கறிஞர்கள், வியாபாரிகள்
2. சட்டவல்லுனர்கள், சித்திரக்கலைஞர்கள், வர்த்தகர்கள், வைத்தியர்கள்
3. சித்திரக் கலைஞர்கள் ,வழக்கறிஞர்கள், வைத்தியர்கள், வர்த்தகர்கள்.
4.வர்த்தகர்கள், வைத்தியர்கள், வழக்கறிஞர்கள், சித்திரக்கலைஞர்கள்

16) *நகர நிர்மாணத் திட்ட வரைபட மாதிரியில் இருந்து சுதந்திர பரிமாற்றம் அடைதல்.
*நகரங்கள் பாரியளவுடையதாகக் காணப்படாமை.
மேலுள்ள கூற்றுகளுடன் தொடர்புடைய இரு நகரங்களாக அமைவது,
1. தம்பதெனியா, குருணாகல்
2. அநுராதபுரம், தம்பதெனியா
3. அநுராதபுரம், பொலநறுவை
4. பொலநறுவை, குருணாகல்

17) இலங்கையின் வாஸ்து விஞ்ஞானத்தின்படியான நிர்மாணிப்புக்களில் தென்கிழக்கு ஆசிய அம்சங்கள் அடங்கிய உதாரணமாக அமையும் விடையினைத் தெரிவு செய்க.
1. எம்பக்க தேவாலயம்
2. பொலநறுவை கல்விகாரையின் புத்தர்சிலை
3. தலதாமாளிகை மற்றும் எம்பக்க தேவாலயம்
4. திவங்க சிலைமனை

18) கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் விடையாக அமைவது.
A- அராபி இனத்தவரான இபின் பதுதா இலங்கைக்கு வருகை தரல்.
B- கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு.
C- பாளி மொழியில் இருந்த புத்தகம் பன்சிய பனஸ் ஜாதகய எனும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டமை.
D- பெலிகலை தலதாமாளிகையினை அமைத்தல்.
1.DBAC 2.ABCD 3.BDCA 4.BCDA

19) இலங்கையில் ஆட்சிக்கு வந்த மன்னர்களில் சிலர் அரசாட்சிக்கு வருவதற்கு முன் பயன்படுத்தப்பட்ட பெயர்கள் கீழே A முதல் E வரை தரப்பட்டுள்ளன.
A- கீர்த்தி இளவரசன் B – சப்புமல் குமாரன்
C- மகா ஆஸ்தான குமாரன் D- டிக்கிரி இளவரசன்
E -அம்புலுகல குமாரன்
மேலுள்ள தகவலின்படி முதலாம் இராஜசிங்கன், ஆறாம் புவனேகபாகு, எட்டாம் வீர பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் பயன்படுத்திய பெயர்களைக் குறிக்கும் விடையாக அமைவது.
1.ACD 2.ADE 3.DBE 4.DBC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) ஆறாம் பராக்கிரமபாகு மன்னனுக்கு ஆரம்பக் காலத்தில் தேவையான பாதுகாப்பினை வழங்கியவர்.
1. வீதாகம மஹா ஸ்தவீர 2. சங்கரகித்த மகாநாயக்க தேரர்
3. வெலிவிட்ட சரணங்கரதேரர் 4. தொட்டகமுவ ஸ்ரீ ராகுலதேரர்

21) யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான பொருத்தமற்ற கூற்றாக அமைவது.
1.இங்கு ஆட்சிப் பரம்பரை நாயக்கர் வம்சம் ஆகும்.
2.யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர் நல்லூர் ஆகும்.
3.மலைநாட்டு இராச்சியத்தைப் போன்று இயற்கையான பாதுகாப்பு இங்கு இல்லாமை.
4.இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைந்ததால் யாழ்ப்பாண இராச்சியம் உருவாக்கப்பட்டது.

22) மலைநாட்டு ஆட்சியாளர்கள் மற்றும் போர்த்துக்கேயர்களுக் கிடையில் போர் நடைபெற்ற இடங்கள் பகுதி I லும் அவற்றை வழிநடத்திய போர்த்துக்கேயத் தளபதிகள் பகுதி II லும் காட்டப்பட்டுள்ளது. இவற்றை தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையாக அமைவது

| பகுதி I | பகுதி II |
|---|---|
| 1. தந்துறைப்போர் | 1. தொன் ஜெரோனிமோ த அசவேது |
| 2. பலனைப்போர் | 2. கொன்ஸ்தாந்தினு த சா |
| 3. ரந்தெனிவெலப் போர் | 3. தியோகோ த மெல்லோ |
| 4. கண்ணொறுவப்போர் | 4. ஜேரோ லோபேஸ்த சூசோ |

**1. DABC  2. DBAC  3. BADC  4. CDBA**

23) கண்டி இராச்சியத்தில் பிரதேச ஆட்சிக்குழுக்கள் மற்றும் அதன் பிரதானிகளைக் காட்டும் விடையாக அமைவது.
1. பத்தே- பத்தே நிலமே
2. மகாவாசல - மகா கபடா நிலமே
3. ரட்டவசம - மகா திசாவே
4. புனித தந்ததாது - தியவடன நிலமே

24) இரட்டை ஆட்சி வீழ்ச்சியடைந்ததன் பின் இந்நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமாக அமைவது.
1. ஆட்சிச் செயற்பாடுகளை வர்த்தக சங்கத்திற்கு வழங்குதல்.
2. இலங்கை முழுமையாக பிரித்தானியர்களின் கைவசமாதல்.
3. கரையோரப் பகுதியும் மலைநாட்டு இராச்சியத்தின் கீழ் கொண்டு வருதல்.
4. கரையோரப் பகுதிகள் பிரித்தானியரின் ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வரப்படுதல்.

25) கி.பி 1818 சுதந்திரப் போராட்டத்தின் போது ஆங்கிலேயர்களுக்கு சார்பாகச் செயற்பட்ட பிரதானியாக அமைவது.
1. எஹலபொல மற்றும் கெப்பட்டிபொல
2. கெப்பட்டிபொல மற்றும் மொல்லிகொட
3. எஹலபொல மற்றும் எக்னெலிகொட
4. மொல்லிகொட மற்றும் எக்னெலிகொட

26) 19ம் நூற்றாண்டில் இலங்கையில் நடைபெற்ற சமய மற்றும் கலாசார புரிந்துணர்வு தொடர்பான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் பொருத்தமற்ற விடையினைத் தெரிவு செய்க.
1. வலானை சித்தார்த்த தேரர் - இரத்மாலனை பரமதம்ம சேதிய பிரிவெனா.
2. ஆறுமுகநாவலர்- உதயபானு பத்திரிகை.
3. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் - இரத்மலானை பரமதம்ம சேதிய பிரிவெனா.
4. சித்திலெப்பை -மருதானை சாஹிராக் கல்லூரி.

27) இலங்கை தேசிய சங்கத்தை உருவாக்கி அதற்குத் தலைமை தாங்கிச் செயற்பட்டவர் யார்?
1. சேர்.பொன்னம்பலம் இராமநாதன்
2. டி.பி.ஜயதிலக
3. சேர்.பொன்.அருணாசலம்
4. டி.எஸ்.சேனாநாயக்க

28) கீழே A முதல் D வரை தரப்பட்டுள்ள பதவிப் பெயர்களுள் 1972 மற்றும் 1978ம் ஆண்டு அரசியலமைப்பு மறுசீரமைப்பின் போது நீக்கப்பட்ட பதவிகளின் பெயர்கள் காட்டப்படும் விடையாக அமைவது.
A- ஆளுநர்
B- பிரதம ஆளுநர்
C- பெயரளவு நிறைவேற்று ஜனாதிபதி
D- நிறைவேற்று ஜனாதிபதி
1. B உம் C உம்   2. A உம் B உம்
3. B உம் D உம்   4. C உம் D உம்

29) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருத்தொன்றுக்கு நேரடியாக பொதுமக்களின் கருத்து பெற்றுக் கொள்வதற்காக நடைபெறும் தேர்தல் அழைக்கப்படுவது.
1. ஜனாதிபதித் தேர்தல்
2. பொதுசன அபிப்பிராயத் தேர்தல்
3. மாகாணசபைத் தேர்தல்
4. பாராளுமன்றத் தேர்தல்

30) மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் பொல்கொல்லையில் நதியை மறித்து சுதுகங்கைக்கு நீரை வழங்கி உலர்வலயத்திற்கு நீரை விநியோகிப்பதற்கு எந்நீர்த்தேக்கம் பயன்படுத்தப்பட்டது?
1. விக்டோரியா
2. போவர்தென்ன
3. கொத்மலை
4. ரந்தெனிகல

31) மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட பிரதான மாற்றத்தைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
1. கலைநிர்மாண்ங்கள் தரத்திற்கு ஏற்ப முன்வருதல்.
2. கலைப்படைப்புக்கள் சமயம் சார்பாக அமைந்தமை.
3. கலைஞர்களின் திறமைகள் சுதந்திரமாக வெளிப்பட்டமை.
4. ஆலயங்கள் கலைஞர்களுக்கு அனுசரணை வழங்கியமை.

32) கைத்தொழில் புரட்சியுடன் தொடர்புடைய கண்டுபிடிப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. "அ" பகுதியுடன் "ஆ" பகுதியை தொடர்புபடுத்தும் போது பெறப்படும் சரியான விடையாக அமைவது.

| அ | ஆ |
|---|---|
| 1. மியூல் இயந்திரம் | A டெம்லர் |
| 2. ரோலர் இயந்திரம் | B ஹம்பிறி டேவி |
| 3. பாதுகாப்பு விளக்கு | C- ஹென்றி கோட் |
| 4. மோட்டார் வண்டி | D- சாமுவெல் கொறம்ப்டன் |

**1. ABCD  2. DCBA  3. ABDC  4. CDAB**

33) கி.பி 1967 இல் இந்நாட்டுப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட மாற்றமாக அமைவது.
1. கொழும்பு கண்டி பெருந்தெரு அமைக்கப்பட்டது.
2. முதன் முறையாக கொழும்பில் இருந்து கண்டி வரை புகைவண்டியொன்று போக்குவரத்தில் ஈடுபட்டமை.
3. கொழும்பு கண்டி புகையிரதப் பாதை ஆரம்பிக்கப்பட்டது.
4. கொழும்பு பதுளை புகையிரதப் பாதை ஆரம்பிக்கப்பட்டது.

• கீழே A,B யில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 34ம் வினாவுக்கு விடையளிக்குக.

A- டெனிஸ் மைதான உறுதிமொழி.
B – லூசிடானியா கப்பலை மூழ்கடிக்கச் செய்தல்.

34) பிரான்சியப் புரட்சியுடன் தொடர்புபட்டது.
1. A உம் B உம் உண்மையாகும்.
2. A உம் B உம் பொய்யானது.
3. A உண்மையானது B பொய்யானது.
4. A பொய்யானது B உண்மையானது.

35) கருஞ்சட்டை இராணுவம் என்னும் பெயரில் ஆயுதப்படையை அமைத்து பாசிசவாதத்திற்கு எதிரானவர்களை அழித்தவன் யார்?
1. அடோல்ப் ஹிட்லர்
2. ஓட்டோவொன் பிஸ்மார்க்
3. பெனிடோ முசோலினி
4. இரண்டாம் வில்லியம்

கீழே A,B,C,D யினால் காட்டப்படும் கூற்றுத் தொகுதிகளை ஆராய்ந்து 36 முதல் 38 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A. 1 - சர்வதேச சங்கம்
2.-இரண்டாம் உலகமகாயுத்தம்

B. 1 - அணுகுண்டுப்போர்
2.- முதலாம் உலகப்போர்

C. 1. - சுற்றாடல் மாசுபடுதல்
2.- தொழில்நுட்ப மயமாதல்

D 1. - யூத இனத்தவர்கள்
2. - நாசி படையினர்

36) முதலாவதின் தவறினால் இரண்டாவது ஆரம்பிக்க காரணமாக அமையும் தொகுதி.
1. A   2. B
3. C   4. D

37) முதலாவது அதிகரிப்பதற்கு இரண்டாவது அதிகரிப்பது காரணமாக இருத்தல்.
1. A   2. B
3. C   4. D

38) முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையில் தொடர்பற்ற கூற்றாக அமையும் தொகுதி.
1. A   2. B
3. C   4. D

39) "ஐக்கிய இனத்தவர்" என முதன் முறையாக பயன்படுத்தப்பட்டது.
1.பணக்கார வர்க்கத்தினருடன் தொடர்புடைய இனத்தவர்கள்.
2.சோசலிச வர்க்கத்தினருடன் தொடர்புடைய வர்க்கத்தினர்.
3.திறமையான ஆதிக்கத்தை உடையவர்களுக்கு எதிராக சண்டையிடுபவர்கள்.
4. நட்பு ஆதிக்கத்தையுடையவர்களுக்கு எதிராக சண்டையிடுபவர்கள்.

40) சோசலிசக் கொள்கைகளை தமது அரசியலமைப்பில் சேர்த்துக் கொள்ளாத நாடாக அமைவது.
1. கிழக்கு ஜேர்மனி
2. சீனா
3. கியூபா
4. பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 22.04.2023-01.05.2024

**சமுதாயத்தில் தனக்கென ஒரு முத்திரை பதிக்கும் மீன இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசியில் சஞ்சரித்து வந்த இராசிநாதன் குரு பகவான், 22.04.2023 முதல் 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். தனஸ்தானமான 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் தனவரவு தாராளமாக வந்து சேரும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிக்கும் ஆற்றல் கிடைக்கும். நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும். உங்கள் இராசிநாதன் குருவைப் பலப்படுத்த வியாழக்கிழமை தோறும் விரதம் இருந்து வருவதோடு சுய ஜாதகத்தில் குருவின் பாதசார பலமறிந்து யோக பலம் பெற்ற நாளில் வழிபட்டால் உன்னதமான வாழ்க்கை அமையும்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்!**

நவக்கிரகங்களில் சுபகிரகமாக விளங்கும் குரு பகவான் உங்கள் இராசிநாதனாகவும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர். அவர் 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பொருளாதாரத்தில் இருந்த பற்றாக்குறை அகலும். நல்ல வரன்கள் வாசல்தேடி வரும். உத்தியோகம்,

## எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



தொழிலில் உயர்ந்த நிலையடைய சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். இரண்டினில் குருவந்தால் இல்லத்தில் மகிழ்ச்சி வரும்! திரண்ட செல்வம்வரும்! திருமணமும் கைகூடும்! உறவினரின் பகை மாறும்! உயர்பதவி வந்திணையும்! குருவை வழிபட்டால்கூடுதலாய் நன்மை வரும்! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது இரண்டாமிடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது இல்லத்தில் உள்ளவர்களின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிக்கும் இடத்தில் குரு சஞ்சரிப்பதால் வளர்ச்சியும் வசதி வாய்ப்பும் அதிகரிக்கும்.

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவான் 6, 8, 10 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் இடமான 6 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் யோகம் தான். இனி எந்த எதிர்ப்புகளும் உங்களைப் பாதிக்காது. இன்னல்களை ஏற்படுத்தியவர்கள் மனம் மாறி உங்கள் காரிய வெற்றிக்கு உறுதுணைபுரிவர். ஆரோக்கியத் தொல்லை அகலும். ஊர் மாற்றங்கள், இடமாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உயர்அதிகாரிகள் மூலமாக சில சலுகைகள் கிடைக்கும். குருவின் பார்வை எட்டாமிடத்தில் பதிவதால் தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். நீண்ட நாட்களாக வாட்டி வதைத்த நோயின் கொடுமை இப்பொழுது தீரும். பழைய பங்குதாரர்களோடு பிரச்சினை ஏற்பட்டதன் விளைவாக அவர்களை விலக்கிவிட்டுப் புதியவர்களைச் சேர்த்துக்கொள்ள முன்வருவீர்கள். வெளிநாட்டிலிருந்து தாய்நாடு திரும்பியவர்கள் மீண்டும் வெளிநாடு செல்ல எடுத்த முயற்சி கைகூடும். பணியாளர்கள் உங்களை விட்டு விலகினாலும் புதிய பணியாளர்களை சேர்த்துக் கொண்டு தொழிலைச் சிறப்பாக நடத்துவீர்கள். இடமாற்றம், ஊர்மாற்றம், வீடுமாற்றம் என்று மாற்றங்கள் வரலாம். குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் முத்தான தொழில் வாய்க்கும். முன்னேற்றம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் தகுதியுள்ள பணியாளர்களை சேர்த்துக் கொண்டு தனவரவைப் பெருக்கிக் கொள்வீர்கள். ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் இனி விலகுவர். வாடிக்கையாளர்களின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். நம்பிக்கைக்குரிய நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர். நாடாளும் நபர்களின் நட்பால் தொழிலை வளப்படுத்திக் கொள்வீர்கள்.

**நட்சத்திரப்படி பாதசாரப் பலன்கள்!**

அசுவதி நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, குருபகவான் உங்கள் இராசிக்கு இரண்டாமிடத்தில் அசுவதி நட்சத்திரக்காலில் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது வருமானம் திருப்தி தரும். குடும்பத்தில் சுபவிரயங்கள் அதிகரிக்கும். புதிய வாகனம் வாங்குவதில் மும்முரம் காட்டுவீர்கள். [illegible] மறைமுகப் [illegible] அவற்றில் பாதிப்புகள் ஏற்படாது. பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளப் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். பரணி நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, குரு பகவான் பரணி நட்சத்திரக்காலில் சுக்கிரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். பொருளாதார நிலை உயரும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சேமிப்பு உயரும். வாங்கிய வீட்டை விற்றுவிட்டோமே இனி மீண்டும் வீடு வாங்கும் யோகம் உண்டா என்ற மனக்கிலேசத்தோடு இருந்தவர்களுக்கு இப்பொழுது மகிழ்ச்சியான தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் சகப் பணியாளர்களுடன் ஏற்பட்ட அரசல், புரசல்கள் மாறும். ஆடம்பரச் செலவைக் குறைத்துக் கொண்டு வெற்றிநடை போடுவீர்கள். தள்ளிப் போன திருமணம் தானாக நடைபெறும். கார்த்திகை நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது புதிய பொறுப்புகளும் பதவிகளும் ஒருசிலருக்கு வந்து சேரும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும் நேரமிது. உங்கள் இராசி அடிப்படையில் 6 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சூரியன். எனவே அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது தீராத வியாதிகள் தீரும். உங்கள் திறமையை வெளிக்காட்ட நல்ல சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகளும் கைகூடும்.

**ராகு- கேதுப் பெயர்ச்சி!**

மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (08.10.2023) அன்று மீன இராசியான உங்கள் இராசியில் ராகுவும் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். எனவே சர்ப்பதோஷம் உருவாகின்றது. ஏற்றமும் இறக்கமும் கலந்த சூழ்நிலை ஏற்படும். வருமானம் வந்தாலும் உடனடியாக செலவாகி விடும். புதிதாக கடன்வாங்கும் சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் உங்களுக்கு வரவேண்டிய உயர்பதவி சக பணியாளர்களில் ஒருவருக்கு போய்ச் [illegible] கூடிய ராகு இப்போது [illegible] இனிமேல் குரு பகவான் கூடுதல் பலம்பெற்றுப் பார்க்கப் போகின்றார். ராகு- கேதுப் பெயர்ச்சியின் விளைவாக நல்ல பலன்கள் கிடைக்க முறையாக சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

**குருவின் வக்கிர காலம்!**

(12.09.2023 முதல் 20.12.2023 வரை) இக்காலம் இனிய காலமாகும். குரு பகவான் அசுவதி மற்றும் பரணி நட்சத்திரக்காலில் வக்கிரம் பெறும் பொழுது கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் என்பதால் யோகத்தையே வழங்குவார். ஆரோக்கியத் தொல்லை அகலும். மருத்துவச் செலவு குறையும். மறக்க முடியாத சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புகள் சிறப்பாக நடைபெற்று மகிழ்ச்சி தரும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். மனக்கிலேசம் மாறும். கோபத்தின் காரணமாக விலகிச்சென்ற குடும்ப உறுப்பினர்கள், பகை மறந்து மீண்டும் வந்திணைவர். தொழில் வெற்றிநடை போடும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்கும் நேரமிது.




**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

மீன இராசியில் பிறந்த பெண்களுக்கு குருப்பெயர்ச்சியின் விளைவாகத் தடைகள் அகலும். தனவரவு திருப்தி தரும். கணவன்-மனைவிக்குள் அன்பும் பாசமும் அதிகரிக்கும். ஏதேனும் ஒரு துறையில் சாதனை படைக்க சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். பிள்ளைகளை நெறிப்படுத்தி உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. குருவின் வக்கிர காலத்தில் சுபகாரியங்கள் கைகூடும். ஏழரைச் சனி நடப்பதால் எதிலும் கொஞ்சம் நிதானம் தேவை. விரயங்களை சுபவிரயமாக மாற்றிக் கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு ஊதிய உயர்வுடன் கூடிய இடமாற்றம் கிடைக்கலாம்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

இல்லத்துப் பூஜையறையில் அஷ்டலட்சுமி படம் வைத்து விளக்கேற்றி லட்சுமி கவசம் பாடி வழிபடுவது நல்லது. யோகபலம் பெற்ற நாளில் நாக தெய்வ வழிபாட்டை மேற்கொண்டால் நல்லது நடக்கும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 172





ரித்திருந்தாய். என் அறிவை மறைத்த மாயையினால் உன்னைச் சில காலம் மறந்திருந்தேன். பிறகு மாயைத் திரை விலகிற்று. உன் அருமையை அறிந்தேன். மதுரை நகருக்கு அழைத்துச் சென்றேன்.

வழியில் உன்னை ஆயர் குடியில் விட்டு விட்டுச் சிலம்பு விற்கச் சென்றேன். வஞ்சகத்தினால் உயிரை இழந்தேன். அதற்குப் பழிக்குப் பழியாக இந்தப் பிறவியில் மதுரைப் பாண்டியன் குலத்தை நாசம் செய்து விட்டுத் திரும்பி வரும் போது உன்னைக் கண்டேன். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்த கண்ணகி நீதான் என்பதை உணர்ந்தேன்!."

சொர்க்கலோக ஆட்சியைத் துறந்து ரிஷி சாபத்துக்கும் துணிந்து உன்னைத் தேடிக் கொண்டு வந்தேன். பிறகு நான் சந்தனு மகாராஜனாகப் பிறந்திருந்தேன். கங்கைக் கரையோடு வேட்டையாடச் செல்லுகையில் உன்னைக் கண்டேன் பூலோகப் பெண்ணைப் போல் உருக்கொண்டிருந்த கங்கையாகிய உன்னைக் காதலித்தேன்.

பிறகு ஒரு காலத்தில் காவேரிப் பூம்பட்டினத்தில் நான் கோவலனாய்ப் பிறந்திருந்தேன் நீ கண்ணகியாக அவத

இப்படிப் பழுவேட்டரையர் முற்பிறவிக் கதைகளைச் சொல்லிக் கொண்டு வந்த போது நந்தினி, அவர் முகத்தைப் பார்க்காமல் வேறு திசையை நோக்கிக் கொண்டிருந்தாள். அதனால் அவள் முகத்தில் அப்போது தோன்றிய பாவ வேறுபாடுகளைப் பழுவேட்டரையர் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால், அவர் தொடர்ந்து பேசியிருப்பாரா என்பது சந்தேகந்தான்.

மூச்சு விடுவதற்காக அவர் சற்று நிறுத்திய போது, நந்தினி அவரைத் திரும்பிப் பார்த்து, "நாதா! தாங்கள் கூறிய உதாரணங்கள் அவ்வளவு பொருத்தமாயில்லை. எல்லாம் கொஞ்சம் அபசகுனமாகவே இருக்கின்றன. வேண்டுமென்றால், தங்களை மன்மதன் என்றும் என்னை ரதி என்றும் சொல்லுங்கள்!" என்று முன்போல் முகமலர்ந்து புன்னகை செய்தாள்.

பழுவேட்டரையரின் முகம் அப்போது மகிழ்ச்சியினாலும் பெருமையினாலும் மலர்ந்து விளங்கியது. எவ்வளவு அவலட்சணமான மனிதனாயினும், தான் காதலித்த பெண்ணினால் 'மன்மதன்' என்று அழைக்கப்பட்டால் குதூகலப்படாதவன் யார்? என்றாலும், தற்பெருமையை விரும்பாதவர் போல் பேசினார்:

"கண்மணி! உன்னை ரதி என்பது மிகவும் பொருத்தமானதுதான். ஆனால் என்னை 'மன்மதன்' என்று சொல்லுவது பொருந்துமா! உன் அன்பு மிகுதியினால் சொல்கிறாய்!' என்றார்.

"நாதா! என் கண்களுக்குத் தாங்கள் தான் மன்மதன். ஆண் பிள்ளைகளுக்கு அழகு வீரம். தங்களைப் போன்ற வீராதி வீரர் இந்தத் தென்னாட்டில் யாரும் இல்லை என்பதை உலகமே சொல்லும். அடுத்தபடியாக, ஆண்மை படைத்தவர்களுக்கு அழகு தருவது அபலைகளிடம் இரக்கம்.

அந்த இரக்கம் தங்களிடம் இருப்பதற்கு நானே அத்தாட்சி. இன்ன ஊர், இன்ன குலம் என்று தெரியாத இந்த ஏழை அநாதைப் பெண்ணைத் தாங்கள் அழைத்து வந்து அடைக்கலம் அளித்தீர்கள். இணையில்லாத அன்பையும் ஆதரவையும் என் பேரில் சொரிந்தீர்கள்.

அப்படிப்பட்ட தங்களை நான் வெகுகாலம் காத்திருக்கும்படி செய்ய மாட்டேன். என்னுடைய விரதமும் நோன்பும் முடியும் காலம் நெருங்கி விட்டது" என்றாள்.


(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

## உருவுகண்டு எள்ளாமை வேண்டும்

உருவத்தில் சிறியவனாக இருப்பதால் அவனை ஏளனம் செய்யக்கூடாது. அவன் வேறு விடயங்களில் வல்லவனாக இருப்பான் என்பதை உணர்த்தும் நீதிக் கதை.



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அது தனது பலத்தாலும் தோற்றத்தாலும் கர்ஜனையாலும் காட்டில் வசித்த அனைத்து மிருகங்களையும் பயமுறுத்தி வந்தது.

பயம் காரணமாய் அனைத்து மிருகங்களும் சிங்கத்திற்கு கிட்டச் செல்வதில்லை. சிங்கத்தைக் கண்டால் பயந்து ஓடிவிடுகின்றன.

ஆனால் ஈ ஒன்று பயமின்றி சிங்கத்தின் மீது வந்து அமர்ந்தது. அதைப் பார்த்ததும் சிங்கம் கோபமுற்று கர்ஜனை செய்தபடியே..' உன்னை என் பற்களால் கடித்துக் குதறுவேன், நகங்களால் விறாண்டுவேன், நசுக்கிப் பொசிக்கிப் போடுவேன் என்றது.

அதற்கு ஈ யோ நீ பலசாலியாய் இருக்கலாம். உன்னைப் பார்த்து மற்ற மிருகங்கள் [illegible] நான் [illegible] மாட்டேன். இன்னும் சொல்லப்போனால்.. நீ சொன்னபடி உன்னையே நீ பற்களால் கடித்துக் கொள்ளவும் நகங்களால் விறாண்டிக் கொள்ளவும் செய்வேன்" என்றது.

இதைக் கேட்ட சிங்கம் கோபத்துடன் ஏலுமாயின் அதைச் செய் என சவால் விட்டது.

ஈ பறந்து வந்து சிங்கத்தின் முதுகில் அமர்ந்து அதைக் கடித்தது. ஈ முதுகில் அமர்ந்த போது அதை விரட்ட சிங்கம் தன் பற்களால் முயன்ற போது ஈ பறந்து விட சிங்கம் தன் முதுகைத் தானே கடித்துக் கொண்டது.

ஈ சிங்கத்தின் முகத்தில் அமர்ந்த போது, அதை விரட்ட தன் கால் நகங்களால் முயல ஈ பறக்க சிங்கம் தன் நகங்களால் தன் முகத்தையே விறாண்டிக் கொண்டது. இவ்வாறு பலதடவை சிங்கத்தை நன்கு இம்சை செய்து விட்டு ஈ பறந்தது.

சிங்கத்தினால் ஈயை பிடிக்கவோ நசுக்கவோ முடியவில்லை. அதனால் சிங்கம் தன் இயலாமையை எண்ணி வெட்கப்பட்டது.

அதன் பின்புதான் சிங்கத்திற்கு புரிந்தது. தான் உடலளவில் வீரமாய் இருந்தாலும் ஒரு சிறு ஈ தன்னை இம்சைப்படுத்தி விட்டதே என்று.

உருவத்தைக் கண்டு யாரையும்எடை போடக் கூடாது இதைத்தான் வள்ளுவரும் 'உருவு கண்டெள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க் கச்சாணி யன்னார் உடைத்து" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நல்ல தலைவன் தான் தலைவன் என்பதை வார்த்தைகளால் அல்ல செயலால் உணர்த்துவனாக இருக்க வேண்டும். ~ விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இராமரின் பட்டாபிஷேகமும் சார்லஸின் முடிசூட்டலும்

இறைவன் தான் இருப்பதை இந்த உலகுக்கு அடிக்கடி நினைவுபடுத்துகின்றான்.

எனினும் மனிதன் கடவுள் இருக்கின்றானா? என்ற கேள்வியை தன்னுள் கேட்டுக் கொண்டே இருக்கின்றான்.

கடவுள் பற்றிய அவனின் சந்தேகம் தீரப் போவதில்லை.

ஏனெனில் அவன்தான் விடுகின்ற தவறுகளையும் பிழைகளையும் நியாயப்படுத்துவதாலேயே கடவுள் இருக்கின்றானா? என்ற கேள்வி அவனுள் அடிக்கடி விழித்து உறங்குகிறது.

உண்மை. கடவுள் தனது இருப்பை நிரூபித்துக் கொண்டே இருக்கிறார். இந்த நிரூபணம் யுகம் கடந்தும் நீடிக்கிறது.

ஆம், தசரதச் சக்கரவர்த்தி தன் மகன் இராமனுக்கு பட்டாபிஷேகம் செய்வதற்கு நாள் தீர்மானிக்கின்றார்.

என்னே! கொடுமை கைகேயி இராமரின் பட்டாபிஷேகத்தைத் தடுத்து நிறுத்துகிறார். தசரதன் நினைத்திருந்தால், உனக்கு இரண்டு வரம் தரமுடியாது என்று அறுதிபடக் கூறியிருக்கலாம்.

ஆனால் அவை எதனையும் தசரதச் சக்கரவர்த்தி செய்யவில்லை.

ஏன்? தெரியுமா அதுதான் இறைவனின் திருவிளையாட்டு.

இராமபிரான் தன் அவதாரத்தின் நோக்கத்தை முடித்தாக வேண்டும்.

முனிபுங்கவரின் சாபத்தை தசரதர் அடைந்தாக வேண்டும். இவை நடந்தாவது இறைகட்டளை என்பதால் கைகேயியின் வரத்தை மறுத்துரைக்க முடியாதவராக மாமன்னர் தசரதர் இருந்தார்.

அது இராமாயணத்துக்கு காப்பியம் என்றால், கலியுகத்திலும் கடவுளின் காரியங்கள் நிறையவே நடந்தாகின்றன.

ஆம், 69 இலட்சம் வாக்குகளால் ஜனாதிபதிப் பதவியைப் பெற்ற ஒருவருக்கு மக்களின் எதிர்ப்பு எப்படி எழுந்தது என்பதை ஒருகணம் சிந்தித்தால் அவன் இன்றி அணுவும் அசையாதென்பது உறுதியாகும்.

பாருங்கள். ஒருகாலத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் சைவாலயங்களை உடைத்து கிறிஸ்தவ தேவாலயங்களை அமைத்தனர். மதம் மாற்றினர்.

ஆனால் அதே பிரித்தானியாவில் நேற்று முன்தினம் (6) பிரித்தானிய மன்னராக சார்லஸ் முடிசூட்டப்பட்டார்.

முடிசூட்டும் நிகழ்வு 70 வருடங்களுக்குப் பின்னர் நடந்துள்ளது.

இதில் அதிசயம் ஆச்சரியம் என்னவெனில், முடிசூட்டு விழாவில் பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் பைபிள் உரை எனும் முக்கியத்துவம் வாய்ந்த உரையை வழங்கினார்.

இங்குதான் ஓர் உண்மை உணரப்பட வேண்டும். அதாவது பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக் ஓர் இந்து. இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். அதிலும் இந்தியாவின் மருமகன்.

ஆக, ஒரு கிறஸ்தவர் மன்னராக முடிசூட்ட ஓர் இந்து பிரதமராக இருந்து வாழ்த்துரைத்தார் எனில், அங்குதான் சமய பேதம் கடவுளுக்கு இல்லை என்பது நிரூபிக்கப்படுகிறது.

ஆக, இராமரின் பட்டாபிஷேகம் முதல் மன்னர் சார்லஸின் முடிசூட்டல்வரை கடவுள் தன் இருப்பை உணர்த்தி நிற்கிறார். இதை மனித குலம் உணர்ந்து கொண்டால் அது போதும்.

## போசாக்கு மட்டத்தை அதிகரிக்க முன்பள்ளி குழந்தைகளுக்கு பிஸ்கட்

(கொழும்பு)

சிறு குழந்தைகளின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் முன்பள்ளிச் சிறார்களுக்கு உயர் போஷாக்குடன் கூடிய பிஸ்கட் வகைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த மாதம் முதல் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

முன்பள்ளிக் குழந்தைகளுக்கு உயர் ஊட்டச் சத்து பிஸ்கட் வழங்கும் திட்டமொன்றை புதிதாக ஆரம்பித்துள்ளோம். அதற்கான அனைத்தையும் தயார் செய்து அடுத்த மாதத்துக்குள் விநியோகம் செய்வோம். மேலும், குழந்தைகளுக்கு முட்டை போன்ற சத்தான உணவுகளை குறைந்த விலையில் வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.(ம-7)

## ரயில் கடவையிலிருந்து சிறுமியின் சடலம் மீட்பு

(களுத்துறை)

களுத்துறை தெற்கு பிரதேசத்தில் காலி வீதியினை அண்மித்து காணப்படும் ஹோட்டல் ஒன்றுக்கு பின்பகுதியிலுள்ள ரயில் கடவையில் இருந்து சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

களுத்துறை நாகொட பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமியே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமி, பெண்ணொருவர் மற்றும் இரண்டு ஆண்கள் கடந்த சனிக்கிழமை மாலை குறித்த ஹோட்டலில் இரு அறைகளில் தங்கியிருந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து தம்பதியினரும் சிறுமியுடன் வந்த இளைஞரும் சில மணித்தியாலங்களுக்கு பின்னர் ஹோட்டலில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ரயில் கடவையில் இருந்து சிறுமியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் அடிப்படையில் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சிறுமியுடன் வருகை தந்த இளைஞரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மாத்தளை, பதுளை, குருநாகல், கேகாலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பதுளை மாவட்டத்தின் பசறை பிரதேசம், காலி மாவட்டத்தின் நாகொட, எல்பிட்டிய, பத்தேகம, யக்கலமுல்ல பிரதேசங்கள் மற்றும் கேகாலை மாவட்டத்தின் ரம்புக்கன, தெரணியகல, மாவனெல்ல, கேகாலை, கலிகமுவ ஆகிய பிரதேசங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், குருநாகல் மாவட்டத்தின் ரிதிகம, மாவத்தகம, அலவ்வ, பொல்கஹவெல மற்றும் மாத்தளை மாவட்டத்தின் பல்லேபொல பிரதேசங்களும் இந்த எச்சரிக்கை உரித்தாகும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மட்டக்களப்பில் கடலில் மூழ்கிய இரு சிறுவர்கள் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கொக்குவில் - இருதயபுரம் சவுக்கடி கடலில் மூழ்கி சிறுவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்

மட்டக்களப்பு - இருதயபுரம் பகுதியை சேர்ந்த 16 மற்றும் 17 வயதுடைய சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு - கொக்குவில் - இருதயபுரம் சவுக்கடி பகுதியிலுள்ள கடலுக்கு நீராடச் சென்ற போது சனிக்கிழமை இருவரும் காணாமல் போயிருந்தனர்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## வயலுக்கு சென்றவர் வெட்டிப் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை - நாப்பதாவில் பகுதியில் அரிவாளால் வெட்டி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு சித்தாண்டி பகுதியைச் சேர்ந்த 74 வயதான ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபருக்கு சொந்தமான ஆடுகள் நீண்ட காலமாக சந்தேகநபரின் தோட்டத்தில் உள்ள பயிர்களை அழித்து வந்துள்ள நிலையில் இருவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை மோதலாக வலுப்பெற்றதில், கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

வயலுக்கு செல்லும் வழியில் குறித்த நபர் வெட்டி கொல்லை செய்யப்பட்டுள்ளார்.

நாப்பதாவில் பகுதியை சேர்ந்த 34 வயதான ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

வாழைச்சேனை குற்றத்தடுப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## மன்னாரில் விபத்து சாரதி படுகாயம்

(மன்னார்)

மன்னாரில் பெரிய பாலத்திற்கும் இடையில் கெப் ரக வாகனம் வீதியோர கற்களில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ் விபத்து நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் நிகழ்ந்துள்ளது.

மன்னார் சிலாவத்துறை வேப்பங்குளம் பகுதியில் இருந்து கடல் உணவு ஏற்றி வந்துள்ளனர்.

இதன் போது குறித்த வாகனத்தின் சாரதி நித்திரை கலக்கத்தில் வீதியோர கற்களில் மோதி வாகனம் தடம் புரண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வாகனத்தின் சாரதி படுகாயங்களுடன் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,285)

## யானை தாக்கியதில் வயோதிபர் உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை - புல்மோட்டை பகுதியில் யானை தாக்கியதில் வயோதிபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

புல்மோட்டை 4-ஜின்னா நகரில் தொடர்ச்சியாக யானையின் அட்டகாசம் இருந்து வந்த நிலையில் நேற்று அதிகாலை யானை குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து அட்டகாசத்தில் ஈடுபட்டு வந்தது.

இதை தடுப்பதற்காக சிலர் ஈடுபட்ட நிலையில் முன்னாள் தபால் ஊழியரான அப்துல்லத்தீப் அன்வர் (58வயது) யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். (ம-7)

## கிளிநொச்சியில் விபத்து ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி ஏ-09 வீதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி நகரத்திலிருந்து பரந்தன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பட்டா ரக வாகனம் ஒன்று திடீரென திருப்பியபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315,316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு


## தொகுப்பு- I

05

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



படம் -8 மீன் கிளைகள்.




### பற்றிறகள் வைத்து கணவாய் பிடித்தல்

கணவாய் பிடிப்பதற்கும் தூண்டில் மூலம் மீன்களைப் பிடிப்பதற்கும் பற்றைகள் இணைக்கப்பட்டு கடலின் அடிப்பகுதியில் அமிழ்த்தி விடப்படுகின்றன. (படம் -9). அடியில் பாரங்கள் பொருத்துவதன் மூலம் இவை நிலையாக ஓரிடத்தில் கிடக்கின்றன.

கணவாய் முட்டையிடும் காலப் பகுதியில் இவை வைக்கப்படுவதினால் பற்றைகளில் கணவாய் வந்து முட்டையிட்டு அதில் தங்குகின்றன. கடற்றாளை உள்ள இடங்களிலும் இப்பற்றைகள் வைக்கப்படுகின்றன. சுற்றிவளைக்கும் சிறியவலை ஒன்றின் உதவியுடன் கணவாய் வளைத்துப் பிடிக்கப்படுகின்றது.

சில இடங்களில் இப்பற்றைகளில் மீன்கள் வந்து கூடுவதினால் கைத் தூண்டில்களைப் பயன்படுத்தியும் மீனைப் பிடிக்கின்றனர். ஒரு வாரத்தின் பின் பற்றைகள் அகற்றப்பட்டு புதுப்பற்றைகள் வைக்கப்படுகின்றன. மன்னார் போன்ற பகுதிகளில் இம்முறை பிரதான இடத்தை வகித்து வருகின்றது.




### கண்ணிவைத்து இறால் பிடித்தல்

ஏரிப்பகுதிகளில் இறால் பிடிப்பதற்கு கண்ணிகள் (படம்-10) பயன்படுத்தப்படுகின்றன. பனைநார், மெல்லிய தங்கூசிகளில் சிறிய கண்ணிகளைச் செய்து நிலையாக ஓரிடத்தில் வைத்து கற்பாறைகளில் தங்கி வாழும் இறாலினங்களை கண்ணிகளை சுருக்கி சடுதியாக இழுப்பதன் மூலம் பிடிக்க முடியும்.




படம்-10

### ஜாஅடைப்பு

கடனேரிகளுக்கும் ஆறுகளுக்கும் குறுக்கே மேலிருந்து கீழாக (செங்குத்தாக) நாணற்பாய்களை வளைப்பதன் வாயிலாக இறால்களையும் மீன்களையும் பெரும்பாலும் பிடிப்பார்கள், மேற்படி உபகரணம் ஜா அடைப்பு(படம் 10a) எனப்படுகிறது. இது மரபுவழியிலான, அதே சமயம் நிரந்தரமான ஒரு வலைவளைக்கும் முறையாகும்.

வலையில் ஆங்காங்கே நாணற்பாய்களால் அடைப்புகள் ஆக்கப்பட்டிருக்கும். இரவு நேரத்தில் இவ்வடைப்பின் அருகில் மீனவர் சென்று அதனுள் ஒரு விளக்கை எரிய விடுவார். இராப் பொழுதில் விளக்கின் ஒளியை நாடி வரும் மீன்கள் வலையை நெருங்கி ஈற்றில் மேற்படி அடைப்புக்குள் சிறைப்படுகின்றன. அடைப்புக்குள் புகுந்த மீன்களால் [illegible] வெளியே வரவே முடியாது. வெற்றிகரமான ஓர் அடைப்பினால் ஏராளமான மீன்களைப் பிடிக்க முடியும். இறால்கள், சிறிய மீன்கள் என்பன பெரும்பாலும் பிடிக்கப்படுகின்றன.

**கடனேரிகளுக்கும் ஆறுகளுக்கும் குறுக்கே மேலிருந்து கீழாக (செங்குத்தாக) நாணற் பாய்களை வளைப்பதன் வாயிலாக இறால்களையும் மீன்களையும் பெரும்பாலும் பிடிப்பார்கள். மேற்படி உபகரணம் ஜா அடைப்பு எனப் படுகிறது.**



ஜா அடைப்பு (படம் 10a)

சுழியோடி ஊசியால் குத்தி இறால் பிடித்தல்



### சிறிய கம்பி ஊசிகள்

சாதாரண சிறிய ஊசிகள் ஒரு தடியில் பொருத்தப்பட்டு காணப்படும். இவை சுழியோடிகள் மூலம் ஆழம் குறைவான பகுதிகளில் கடலட்டை, சிங்க இறால், திருக்கை போன்றவற்றை குத்தி எடுக்கப் பயன்படுத்தப்படுகின்றன. கம்பியின் நுனி சிறிது வளைக்கப்பட்டு கொளுக்கி போல் காணப்படும். இதன் மூலம் குழிகளில் அல்லது பொந்துகளில் உள்ள [illegible] நண்டு. கணவாய் போன்றவை கொழுவி இழுத்து எடுக்கப்படுகின்றன.

நீர்வாழ் உயிரினங்களை அறுவடை செய்யப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், கருவிகள், கலங்கள் அனைத்தும் மீன்பிடிச் சாதனங்கள் என்று அழைக்கப்படுகின்றன. மீன் பிடிச்சாதனங்களை அமைப்பு ரீதியாக, பயன்பாட்டு ரீதியாக, பரிணாம அடிப்படையிலாக, சூழலினதும் வளங்களினதும் நிலைபேறான தன்மையில் ஏற்படுத்தும் செல்வாக்கு அடிப்படையிலாக வேறுபடுத்த முடியும்.

மீன்பிடிச் சாதனங்களை அமைப்பு ரீதியாகப் பார்க்கும் போது வலைமீன் பிடிச்சாதனம், தூண்டில்மீன் பிடிச்சாதனம், ஏனைய மீன்பிடிச் சாதனம் எனப் பகுக்கலாம். ஏனைய மீன்பிடிச் சாதனம் என்று கூறப்படுவன கரப்பு, அத்தாங்கு, பறிக்கூடு போன்றவையாகும்.

தூண்டில் மீன்பிடிச் சாதனத்தில் பல வகையுண்டு. சாதனத்தின் பிரதான பகுதி அல்லது பெரும் பகுதி தூண்டில் கொளுக்கிகள் பிணைக்கப்பட்ட வடத்தினால் ஆக்கப்பட்டிருக்குமாயின் அது தூண்டில் வகைச் சாதனமாகும். அவை கைத்தூண்டில், கயிறு தூண்டில், ஓடு கயிற்றுத் தூண்டில் போன்றவையாகும். தூண்டில் கொளுக்கிகளின் வகைகளும் வடிவத்திற்கு அமைய வேறுபடும்.

அவற்றின் வடிவத்தில் J வடிவம், U வளைவான வடிவம், கொத்தான அமைப்பு போன்றவை முக்கியமானவையாகும். தூண்டில் மீன்பிடிச் சாதனங்கள் பற்றி இப்போது பார்ப்போம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம்...

இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் கண்ணதாசன் ராகுலன் (வயது-18) எனும் மாணவனே உயிரிழந்துள்ளான்.

மாணவனின் வீட்டில் வளர்க்கப்பட்ட ஆடு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குட்டி ஈன்றுள்ளது.

அந்நிலையில் அன்றைய தினம் இரவு முழுவதும் யாழில் கடும் மழை பெய்தமையால், ஆட்டுக் குட்டிகள் குளிரினால் கத்திய வண்ணமே இருந்துள்ளது.

அதனால் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மாணவன் குட்டிகளை இடம்மாற்ற முனைந்தபோது , ஆட்டு கொட்டிலுக்கு அருகில் பொருத்தப்பட்டு இருந்த மின் குமிழுக்கு சென்ற வயரில் மின் ஒழுக்கு ஏற்பட்டு மாணவன் மின்சார தாக்குதலுக்கு இலக்காகி உள்ளான்.

மாணவனை பெற்றோர் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோது, மாணவன் உயிரிழந்துள்ளான்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## வங்கக்கடலில்...

மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த அறிவிப்பு இன்று மாலை 3 மணி வரை நடைமுறையில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தென்கிழக்கு வங்காள விரிகுடா கடல் பகுதியை சுற்றி வளிமண்டலத்தில் கொந்தளிப்பு நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலை அடுத்த சில நாட்களில் குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமாக மாறி பின்னர் சூறாவளியாக மாறும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே, 5 - 10 வடக்கு அட்சரேகைகள், 90 - 100 கிழக்கு தீர்க்கரேகைகள் மற்றும் 1 - 4 வடக்கு அட்சரேகைகள் மற்றும் 85 - 92 கிழக்கு தீர்க்கரேகைகளுக்கு இடைப்பட்ட கடற்பரப்புகளில் அடுத்த சில நாட்களுக்குப் பயணிக்க வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இந்த மண்ணில்...

வனூர் பகுதியில் சிறுகைத் தொழிலகமும் மாதிரிப் பண்ணையும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாங்கள் வாங்கும் பொருட்களின் விலை மற்றும் உற்பத்தி செலவு, அதனை சந்தைப்படுத்தல் மற்றும் அதனால் வரக்கூடிய இலாபம் மிகக் குறுகியதாக இருக்கின்றது. ஏனெனில் இந்த நாட்டினுடைய பொருளாதார நிலைமையும் அவ்வாறானது.

இந்த நிலையில் உழைப்புக்கேற்ற ஊதியத்தை பெறக்கூடிய வகையில் எங்களுடைய செயல்திட்டங்களை நாங்கள் முன்னெடுக்க வேண்டும்.

எங்களுடைய சொந்த நிலத்தில் சொந்தக் காலிலே நாங்கள் உழைத்து முன்னேற வேண்டும். கிடைக்கின்ற சின்ன உதவிகளை எவ்வாறு மேம்படுத்துவது என்ற திட்டங்கள் உங்கள் மனங்களில் வரவேண்டும். அதுதான் என்றார். (ம-7,100)

## அரசாங்கத்துக்கு...

செய்துள்ளதாகவும், வெறும் மேடைகளில் பேசுவதால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டின் மாற்றுக் கட்சிகள் என்று கூறும் தரப்புகள் அதிகாரம் இன்றி மக்களுக்கு எதுவும் ஆற்றவில்லை எனவும், எனவே அதிகாரம் இல்லாவிட்டாலும் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய தரப்புகளுக்கு நாட்டை கட்டியெழுப்ப சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென்றே நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

அதிகாரம் இல்லாமல் இவ்வாறான சேவையை மேற்கொள்வார்கள் என்றால், அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு எவ்வளவு சேவை மேற்கொள்ள முடியும் எனவும் மக்கள் புத்திசாலித்தனமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

சீரழிந்து, வங்குரோத்தாகி பல்வேறு விடயங்களால் பிளவுபட்டுள்ள நாட்டை ஐக்கிய மக்கள் சக்தி தரப்பாலே மீண்டும் கட்டியெழுப்ப முடியும் எனவும், இதைவிடுத்து வேறு மாற்று இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## 6 பேருக்கு...

திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் 6 இலட்சத்து 72 ஆயிரத்து 221 பேருக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளது.

மேலும், 8 பேருக்கு புதிதாக கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 'சிங்கள...

கந்தரோடையில் தனியார் காணியைக் கொள்வனவு செய்து, பௌத்த பிக்கு ஒருவர் அதில் விகாரை அமைப்பதற்கு எடுத்து வரும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வலிகாமம் தமிழ்த் தேசியப் பேரவை பல அமைப்புகளுடன் இணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் கொட்டும் மழையிலும் இடம் பெற்றது.

சிங்கள பௌத்த பேரினவாத அரசின் பூரண அனுசரணையுடன் தமிழ்த் தேசத்தின் இருப்பை அழித்து வரலாற்றைத் திரிபுபடுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் கட்டமைக்கப்பட்ட மரபுரிமைசார் இனவழிப்பு செயற்பாட்டுக்கு எதிரான இப்போராட்டத்திற்கு தமிழர் வாழ்வுரிமை மையம் மற்றும் கந்தரோடை சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் இணைந்து தமிழ்த் தேசியப் பேரவை முன்னெடுத்தது

இப்போராட்டத்தில் கந்தரோடையில் பௌத்த மயமாக்கலை நிறுத்து, த்மிழர் தேசத்தில் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை நிறுத்து, இனவாதத்'தை கைவிடு, புத்த தர்மத்தை கடைப்பிடி, எங்கள் கிராமத்தில் விகாரை வேண்டாம் என்ற கோஷங்களை தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளை தாங்கிய பதாகைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்ணி பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் சட்டத்தரணிகளான காண்டிபன், சுகாஸ், குறித்த கட்சியின் ஆதரவாளர்கள் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சே. கலைஅமுதன் மற்றும் அப்பகுதி மக்கள் கலந்துகொண்டிருந்தனர். (ம-7,33)

## சமஷ்டி...

உள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

வடக்கு தமிழ் எம்.பிக்களுடன் அதிகாரப்பகிர்வு, அபிவிருத்தி உள்ளிட்ட வடக்கு மக்கள் சார்ந்த பிரச்சினைகள் குறித்து எதிர்வரும் 11ஆம் திகதி முதல்பேச்சு நடத்த ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில், அந்த அழைப்பினை ஏற்றுக்கொண்டு குறித்த தொடர் பேச்சுவார்த்தையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்குமா? என்ற கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

முன்னதாக ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தத்தின் ஊடாக இனப் பிரச்சினைக்கு தீர்வு என்ற தனது முடிவை பௌத்த தேரர்களின் போராட்டத்தினை அடுத்து ஜனாதிபதி மாற்றிக்கொண்டார் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியை உடைய நபரின் அழைப்பினை ஏற்று எவ்வாறு தாம் பேச்சுவார்த்தையில் பங்கேற்பது என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வியெழுப்பியுள்ளார். (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 07/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1562
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 1 6 5 0 0 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.05.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1137
I 17 27 31 51
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.05.07
சீட்டிழுப்பு இலக்கம் 3349
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
N 07 64 68 71
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 07/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1455
T 01 02 45 67 79

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.07
சீட்டிழுப்பு இலக்கம் 416
சிம்மம் 07 23 38 46 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/05/07
சீட்டிழுப்பு இலக்கம் 5107
D 2 8 0 4 2 6
தேசிய லொத்தர் சபை

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி:2023.05.07
வெற்றி வாரம்: 4242
வர்ணம்: இளம் சிவப்பு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.43,870,586.70
வெற்றி இலக்கங்கள் 07 18 51 62 F
DLB

சசிரி
வெற்றி வாரம் 320
சீட்டிழுப்பு திகதி 2023.05.07
பிரவுன்
வெற்றி இலக்கங்கள் 02 10 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,276,680/-
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2081
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.07
தினம் ஞாயிற்றுக்கிழமை
C 37 51 60 77
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,808,300/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,390,077.60
திகதி 2023-05-07
வெற்றி வாரம் 3793
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 04 10 14 43 கன்னி
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 8,214,280/-
DLB



ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 12 22 26 36 56
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 327,906,447.00
2023.05.07
DLB

அட கோடீபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 1907
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.05.07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.83,877,023.60/-
வெற்றி இலக்கங்கள் 01 09 50 55 Q
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பிறவுண் வீதியில் பொருத்தமற்ற வடிகால்

## வெள்ளத்தில் மூழ்கியது 2 ஆம் ஒழுங்கை


(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினமும் நேற்று அதி காலையும் பெய்த கடும் மழை காரணமாக யாழ்ப்பாணம் பிறவுண் வீதி இரண்டாம் ஒழுங்கை வெள்ளத்தில் மூழ்கி வெள்ளம் பெருக்கெடுத்தது.

இதனால் குறித்த 2 ஆம் ஒழுங்கையில் உள்ள வலம்புரியின் அலுவலகத்தில் வெள்ளம் புகுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

பிறவுண் வீதி காப்பெற் வீதியாக அமைக்கப்பட்ட போது வீதியின் இருமருங்கிலும் கட்டப்பட்ட வடிகால் பொருத்தமற்றதாக இருப்பதுடன் பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் பொலித்தீன் குப்பைகள் அடைத்து வடிகால் வெள்ளம் நிறைந்து 2 ஆம் ஒழுங்கையில் பெருக்கெடுத்தது இதனால் 2 ஆம் ஒழுங்கையில் உள்ள வலம்புரி அலுவலகம் உட்பட வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை வெள்ள நீரை ஓட வைப்பதில் வலம்புரி உத்தியோகத்தர்கள் மழையையும் பொருட்படுத்தாமல் கடும் பிரயத்தனம் எடுத்தனர். (ம-7)


## தேவை

சுன்னாகத்தை அண்மித்த பகுதியிலுள்ள இரும்புக்கடை ஒன்றிற்கு பொருட்களை ஏற்றுவதற்கு உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு (15481)

074 041 7530

## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்

077 544 8503 (15537)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: •கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு (C-6500)

வயது >30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்) அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

## மணமகள் தேவை

1978 ஆம் ஆண்டு கேட்டை நட்சத்திரத்தில் பிறந்த 11 ஆம் இடத்தில் சூரியன் செவ்வாய் உள்ள சுயதொழில் செய்யும் இந்து மணமகனுக்கு மணமகள் தேவை. (15481)

075 981 4691

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15455)

076 825 7716 (ஆகாஸ்)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

•STUDENT VISA •TOURIST VISA •SPOUSE VISA •SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடிப்புத்து தரப்படும் (C-6500)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

0777-068-777

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 076 559 3322 (15490)

## நீங்கள் கடுமையாக இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

இன்றே பாவியுங்கள்

சித்தாரா துளசி அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY.

சந்தைப்படுத்துவோர்: சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(c-6499) (குறிப்பு : சந்திரச்சந்திக்கு அண்மையில்)

## Maths Classes

Gr. 6 to A/L (Tamil & English Medium)

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள் சாவகச்சேரியில் நடைபெறுகின்றன.

- A/L இணைந்த கணிதம்
- தரம் 6 தொடக்கம் 11 வரை

(15476)

074 240 4581

## குத்தகைக்கு தேவை

வான் / கார் தனியார் கம்பனிக்கு குத்தகைக்குத் தேவை. தகுந்த பெறுமானம் வழங்கப்படும். (15488)

077 971 5379

## யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

## சேவை நலன் பாராட்டு



எமது செயற்பாடுகள் அத்தனையிலும் தோழோடு தோள்நின்று கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை சிறப்பாக்கி 08.05.2023 இன்று ஓய்வுபெறும் பொருளியல் பேராசான் உயர்திரு. மாணிக்கம் லோகசிங்கம் அவர்களும்

01.05.2023 அன்று விருப்பு ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை திருமதி சுபத்திரா ஜெயானந்தகுமார் அவர்களும் இன்னும் இன்னும் பல தடங்கள் பதித்து என்றும் இனிதே வாழ்க !

வாழ்க! வாழ்க! ! வாழியவே !!!



Best Wishes!

பிரதி அதிபர் பொருளியல் பேராசான்
உயர்திரு.மாணிக்கம் லோகசிங்கம் அவர்கள்
(BBA (Hons), Dip.in.Edu, Dip.in Pub.Adm)

விஞ்ஞான ஆசிரியை பகுதித் தலைவர்
திருமதி சுபத்திரா ஜெயானந்தகுமார் அவர்கள்
(Science Trained, B.Ed, Physically Diploma M.Ed, Parttime Lecturer B.Ed)

(15492)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.